
# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்

மீகா 7:15



THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

January - February 2025
Volume : 65

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 1

## தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் Rev. Fr. Joe Arun அவர்களுடன் நமது பிரதேச தலைவர்களின் சந்திப்பு – NLAG






## ஈரோடு தெற்கு மண்டல போதகர்களின் மிஷனரி பயணம் – ஜார்கண்ட் மாநிலம்






## நாமக்கல் மண்டல பெண்கள் முகாம்




ஆசிரியரிடமிருந்து........!



# உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்

இயேசுவின் அற்புத நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நாம் ஆராதிக்கும் இயேசு கிறிஸ்து அதிசயங்களைச் செய்யும் அதிசயமான தேவன் (நியா.13:18; சங்.72:18; 77:14; 86:10). **'நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்,'** என்று மீகா 7:15-ல் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து கானானை சுதந்தரிக்கும் நாள் மட்டும் செய்த அதிசயங்களை நம்முடைய வாழ்க்கையிலும் இந்த 2025ம் வருடம் செய்ய வல்லவராயிருக்கிறார். நீங்கள் அதை எதிர்பாருங்கள்! ஜெபித்துப் பெற்றுக்கொள்ளுங்கள்! தேவனாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (எரே.32:17).

## 1. விசேஷமான அதிசயம்

தேவன் மோசேயிடம் பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன் என்றார் (யாத்.34:10). நம்முடைய தேவன் சர்வ வல்லமையுள்ளவர். தேவனுடைய செயல்கள் விசேஷமானவைகள். எகிப்தின் மந்திரவாதிகள் தேவன் செய்த காரியங்களைச் செய்ய முயற்சித்தபோது அவர்களால் கூடாமற்போயிற்று என்று வேதம் கூறுகிறது (யாத்.8:18). மனிதனால் கூடாதவைகள் தேவனால் கூடும் (லூக்.18:27). மனிதன் மேல் நீங்கள் இம்மட்டும் வைத்திருந்த நம்பிக்கையை விட்டு, இந்த வருடம் தேவன் மேல் நம்பிக்கை வையுங்கள். தேவன் நீங்கள் எதிர்பாராத விசேஷித்த காரியங்களை உங்களுக்குச் செய்வார்.

## 2.வித்தியாசத்தை உண்டு பண்ணின அதிசயம்

தேவன், என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன் என்று பார்வோனிடம் கூறும்படி மோசேயிடம் பேசினார் (யாத்.8:23). அதின்படி யாத்திராகமம் 9:26ல் இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலே மாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது என்றும், யாத்.10:22,23ல் தேசமெங்கும் காரிருள் உண்டானபோது இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களில் வெளிச்சம் இருந்தது என்றும், யாத்.11:7ல் தேவன் இஸ்ரவேல் புத்திரர் அனைவரையும் விசேஷமாகப் பாதுகாத்தார் என்றும் வேதம் கூறுகிறது. உங்கள் வாழ்விலும் தேவன் உங்களுக்கும் தேவனை அறியாத

மற்றவர்களுக்கும் இடையே ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணுவார். நீங்கள் ஆராதிக்கிற தேவன் ஆச்சரியமானவர் என்பதை ஜனங்கள் கண்டு கொள்வார்கள் (சங்.126:2).

## 3.விடுதலையாக்கின அதிசயம்

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை 430 ஆண்டுகள் அடிமைத்தனத்திலிருந்து அதிசயமாக விடுதலையாக்கினார். ஒன்பது வாதைகளுக்குப் பின்பு பத்தாவது வாதையாகிய எகிப்தியரின் முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம் பண்ணி இஸ்ரவேல் ஜனங்களை இரத்தத்தினால் பாதுகாத்தபோது, பார்வோனின் கடின இருதயம் மாறி தேவ ஜனங்களை தேவனை ஆராதிக்கும்படி வெள்ளியுடைமை களோடும், பொன்னுடைமைகளோடும் அனுப்பிவிட்டான் (யாத்.12:31-51). நம்முடைய ஆண்டவர் விடுவிக்கிறவர். அற்புதங்களிலேயே பெரிய அற்புதம் பாவ, சாப அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதாகும். தேவன் உங்களுக்குத் தேவையான விடுதலையைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். மேலும் பல ஆண்டுகளாக உங்களுக்குள்ள நெருக்கங்கள், கடன் பிரச்சனைகள், சரீர பெலவீனங்கள் ஆகியவற்றிலிருந்து தேவன் உங்களை விடுவித்து உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை தலைநிமிர்ந்து நடக்கப்பண்ணுவார் (லேவி. 26:13).

## 4.வழிதிறக்கும் அதிசயம்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகிப் புறப்பட்ட பின் அவர்கள் முன்பாக செங்கடல் தடையாக நின்றது. முன்னே கடல், பின்னே எகிப்தின் இராணுவம், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்த மக்களுக்குத் தேவன் அதிசயம் செய்தார். செங்கடலைப் பிளந்தார். ஜனங்களை வெட்டாந்தரையில் நடத்தினார். எகிப்தின் சேனையைக் கடலில் கவிழ்த்துப் போட்டார். (யாத்.14:5-13;15:19; சங்.66:6; 78:13; 106:9; எபி.11:29). தேவ ஜனமே, தேவன் நமக்காக அடைக்கப்பட்ட வழிகளைத் திறக்கிறவர். தடைகளை அகற்றுகிறவர் (மீகா 2:13). உங்களுக்காக ஒரு புது வழியை அதிசயமாகத் திறப்பார். சோர்ந்து போகாதிருங்கள், கலங்காதிருங்கள், நம் தேவன் ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவர். (சங்.136:4; ஏசாயா 43:19). யோர்தானும் வழி திறக்கும் (யோசுவா 3:15-17). எரிகோவின் அலங்கங்களும் இடிந்து விழுந்து வழி விடும். (யோசுவா 6:20). உங்கள் வேலையில், தொழிலில், ஊழியத்தில் நீங்கள் சந்தித்து வரும் தோல்விகள் மாறும். தடைகள் விலகும். ஒரு திறந்த வாசலை உங்களுக்குத் தருவார் (வெளி.3:8).

## 5.வழிநடத்தின அதிசயம்

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் மிகவும் ஆச்சரியமாக 40 ஆண்டுகள் வழி நடத்தினார். முதலாவது அவர்களுடைய பயணத்திலே பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினி ஸ்தம்பமாகவும் இருந்து (யாத்.13:21,22). ஒரு தகப்பன் தன் பிள்ளையைச் சுமப்பது போலச் சுமந்து சென்றார் (உபா.1:31). இரண்டாவதாக அவர்களை அற்புதமாக வானத்தின் மன்னாவினால் போஷித்தார். கன்மலையின் தண்ணீரால் தாகம் தீர்த்தார் (யாத்.16:4; நெகே.9:15,20; சங்.78:24,25;105: 40,41). மூன்றாவதாக சரீரத்தில் நல்ல ஆரோக்கியம் தந்தார். அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை என்று வேதம் கூறுகிறது (சங்.105:37; யாத்.15:26). தேவன் அவர்களை அதிசயமாக நடத்தினார். அவர்கள் வஸ்திரங்கள் மற்றும் பாதரட்சைகள் பழையதாய்ப் போகவில்லை. என்ன

ஆச்சரியம்! அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு அவர்களை அற்புதமாகப் பராமரித்து வந்தார் (நெகே.9:21; உபா.2:7; 8:15) என்று வேதம் கூறுகிறது. இந்த தேவன் இன்றும் ஜீவிக்கிறார். உங்களையும் இவ்வருடத்தில் 12 மாதங்களும் 365 நாட்கள் அதிசயமாகப் பாதுகாத்துப் பராமரிப்பார்.

## 6.வர்த்திக்கப்பண்ணிய அதிசயம்

உபாகமம் 1:10ல் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணினார் என்று மோசே கூறுவதைக் காண்கிறோம். உபாகமம் 10:22ல் எழுபது பேராய் எகிப்திற்குச் சென்ற ஜனங்களை, திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப் போலாக்கினார் என்று வேதம் கூறுகிறது. தேவன் நம்மை ஆசீர்வதித்து ஆயிரம் மடங்காகப் பெருகப்பண்ணுகிறவர் (உபா.1:11). வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் இவ்வருடத்தில் ஒரு பெருக்கத்தை எதிர்ப்பாருங்கள். தேவன் நமக்குப் பொருளாதார மற்றும் ஆத்தும அறுவடையைத் தந்து ஆசீர்வதிப்பார். தேவனுடைய ராஜ்யத்தில் நமது பணம், நேரம், திறமைகளை விதைத்து அறுவடையைப் பெற்றுக் கொள்வோம்!.

## 7.விஸ்தாரமான தேசத்தைச் சுதந்தரிக்கச் செய்த அதிசயம்

யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேல் ஜனங்கள் 31 ராஜாக்களை மேற்கொண்டு, விஸ்தாரமான கானான் தேசத்தை சுதந்தரித்தார்கள் (யோசுவா 12:24;13:1; சங்.135:9-12;137:17-22). நம் ஆண்டவர் நமது எதிரியான சாத்தான்மேல் நமக்கு ஜெயத்தைத் தந்து பட்டணத்தை, தேசத்தை, பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க நமக்கு உதவி செய்வார். நாம் ஜெபத்தினாலும், விசுவாசத்தினாலும் சாத்தானின் கிரியைகளை முறியடித்து ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறுவோம்! தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்வோம்!.

இஸ்ரவேல் ஜனங்களில் அநேகர் மேற்கூறப்பட்ட தேவனுடைய அற்புதங்களுக்குப் பாத்திரவான்களாய் இல்லை. ஏனெனில் அவர்களுடைய பாவம் (எபி.3:17), கீழ்ப்படியாமை (3:18) அவிசுவாசம் (3:19) தேவனுடைய அற்புதத்தை அவர்களுடைய வாழ்க்கையில் தடைசெய்தது. நாம் அப்படியிராமல் பரிசுத்தத்தோடு (யோசுவா 1:5), விசுவாசத்தோடு (யோவான் 11:41), கீழ்ப்படிதலோடு (யோவான் 2:8), ஜெபத்தோடு (மாற்கு 10:47-49). நம்மை ஆயத்தப்படுத்தி தேவனுடைய அற்புதங்களைப் பெற்றுக் கொள்வோம்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# குடும்பத்திற்கான ஆவிக்குரிய இலக்குகள்

**Rev.J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**

செயலாளர், தமிழ் பிரதேச ஏ.ஜி. சபைகள்
மூத்த போதகர் ஏ.ஜி. சர்ச், வேலூர் - 6

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் யாவருக்கும் எங்களது புத்தாண்டு வாழ்த்துக்கள். இன்னமொரு ஆண்டை காணச்செய்த தேவாதி தேவனுக்கு மகிமை உண்டாவதாக. நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் அவருடைய கிருபையே.

ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும், புதிய தீர்மானங்கள் எடுப்பது பெரும்பாலானவர்களின் வழக்கம். ஆனால் கடைசிவரை அதை செய்கின்றோமா என்பது கேள்விக்குறிதான்.

We need to have something to do, something to love, something to hope என்று பழைய கூற்று ஒன்று கூறுகிறது.

இலக்குகள் எதுவும் இல்லையென்றால் நாம் சோர்ந்து போய் விடுகிறோம். இலக்குகள் நம்பிக்கையையும், தெளிவான வழிகாட்டுதலையும் நமக்குக் கொடுக்கிறது.

பொருளாதாரத்திற்கு, கல்விக்கு, விடுமுறை பிரயாணங்களுக்கு, எதிர்கால வேலைக்கு என பல பகுதிகளுக்கு இலக்குகள் வைக்கும் அநேக விசுவாசிகள், ஏனோ ஆவிக்குரிய வாழ்க்கைக்கு இலக்குகள் வைக்கிறதில்லை. இலக்குகள் இல்லாததினால் தான் அநேகர் ஆவிக்குரிய வாழ்க்கையில் தோற்றுவிடுகிறார்கள். "தேவ பக்திக்கு ஏதுவாக முயற்சிபண்ணு" (1 தீமோ. 4:7) என்ற தேவ வார்த்தை தெளிவாக விளக்குகிற காரியங்களில் ஒன்று பக்தி தானாக வருகிற ஒன்றல்ல. முயற்சிக்கும்போது பெற்றுக்கொள்ள கூடிய ஒன்று என்பதுதான்.

ஒவ்வொரு குடும்பத்திலும் தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொருக்கும் இலக்குகள் வைத்திருந்தாலும் குடும்பமாக கணவன்-மனைவியாக சேர்ந்து செய்ய வேண்டிய இலக்குகளையும் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும். உங்களுடைய சிந்தனைக்காகவும், ஒரு சிறிய வழிகாட்டுதலுக்காகவும் ஒரு சில காரியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளிலும், மேலும் ஆண்டவர் உங்களுக்கு உணர்த்துகிற காரியங்களிலும் சில இலக்குகளை தீர்மானியுங்கள். செயல்படுத்த ஆரம்பியுங்கள்.

- ஒரு நாளில் தனியாக, குடும்பமாக வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் (முறையாக).
- ஒரு நாளில் தனியாக, குடும்பமாக ஜெபிக்க வேண்டிய ஜெப நேரங்கள்.
- ஒரு வாரத்தில் தனியாக, குடும்பமாக உபவாசம் இருக்க வேண்டிய நேரங்கள்.
- ஒரு மாத காலத்திற்குள் வாசிக்க வேண்டிய ஆவிக்குரிய புத்தகம்/புத்தகங்கள்.
- மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கணவன்-மனைவியாக திருச்சபைக்கு சென்று ஜெபிக்கிற நேரங்கள்.
- ஆண்டவர் உங்களுக்கு கொடுத்திருக்கிற தாலந்துகள், திறமைகள் போன்றவற்றை திருச்சபை மூலமாக செயல்படுத்துவதற்கு ஒரு வாரத்தில் ஒதுக்கும் நேரங்கள்.

- திருச்சபைக்கும், மற்ற ஊழியங்களுக்கும் கொடுக்கும் பொருளாதார உதவிகள்.
- திருச்சபையில் நீங்கள் ஈடுபட விரும்பும் ஊழியங்கள் மற்றும் அதற்கான முயற்சிகள்.
- வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் குடும்பமாக அல்லது இரு குடும்பங்களாக இணைந்து ஒரு கிராமத்தை தத்தெடுத்து, திருச்சபையோடு சேர்ந்து ஊழியம் செய்தல்.
- குடும்பமாக நீங்கள் சந்தித்து, திருச்சபைக்கு வழிநடத்தும் குடும்பங்களின் எண்ணிக்கைகள்.
- திருச்சபையில் உள்ள ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் வழிமுறைகள் (அவர்களுடைய அடிப்படை தேவைகள், கல்வி... etc)
- திருச்சபை இல்லாத இடங்களிலும் நிலங்கள் வாங்க, கட்டிடங்கள் கட்ட உதவி செய்ய பொருளாதாரங்களை தீர்மானித்தல்.
- வட இந்தியாவிற்கோ, தமிழகத்தின் பின்தங்கிய மாவட்டத்திற்கோ மிஷனரி பயணம் போய் ஊழியம் செய்யும் நாட்கள்.

இவைகளோடு ஆண்டவர் தனிப்பட்ட விதத்தில் உங்களுக்கு வெளிப்படுத்தும் காரியங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

**நடைமுறை ஆலோசனைகள்:**

1. இலக்குகளை தெளிவாக எழுதி அடிக்கடி கண்ணில்படுகிற இடத்தில் வையுங்கள்.
2. ஒருசில நாட்களில் அல்லது வாரங்கள் செய்ய முடியாமல் போனால் சோர்ந்து போகாமல் நிறுத்தாமல், தொடர்ந்து செய்ய முயற்சியுங்கள்.
3. உங்களுடைய இலக்குகளை குடும்ப உறுப்பினர்களோடு பகிர்ந்துகொண்டு, இணைந்து செய்ய முயற்சியுங்கள்.
4. உங்களால் முடியாத ஒன்றை செய்ய முயற்சிக்க வேண்டாம். அடைய அடைய முடியாத இலக்குகளையும் தீர்மானிக்க வேண்டாம். முடிந்த சிறு சிறு இலக்குகளில் ஆரம்பித்து பெருக்கி கொண்டே போங்கள்.
5. குடும்பத்தில் ஒருவர் சோர்ந்துபோனாலும் விட்டுவிட முயற்சித்தாலும், மற்றவர்கள் உற்சாகப்படுத்தி செய்ய வையுங்கள்.
6. சிறு பிள்ளைகளையும் கூட உற்சாகப்படுத்தி இலக்குகளை அடைய ஊக்கப்படுத்துங்கள். எதிர்காலத்தில் அது அவர்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.
7. எதிர்மறையான சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல் இலக்குகளை மையமாக வைத்த முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

இப்புதிய ஆண்டில் இதுவரை செய்யாத, சாதிக்காத, முயற்சித்து தோற்றுப்போன பல காரியங்களை செய்ய ஆண்டவர் கிருபை தருவாராக. உங்களுடைய குடும்பம், அநேக குடும்பங்களுக்கும், பிரச்சனைகளுக்கும், தேவ இராஜ்யத்திற்கும் ஆசீர்வாதமாக மாறுவதாக ஆமென்.

அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக (சங்.20:4).

நான் ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி, பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய் இலக்கை நோக்கி தொடர்கிறேன் (பிலி.3:13,14).



# தேவன் படைத்த அற்புதமானது நமது உடல்

Rev. P.S. ராஜமணி

1. நம்ம உடம்புல எத்தனை செல்கள் இருக்குது தெரியுமா? 60 டிரில்லியன், டிரில்லியன்னா எவ்வளவு தெரியுமா? 10 லட்சம்னா ஒரு மில்லியன். 10 மில்லியன் ஒரு பில்லியன். 10 பில்லியன்னா ஒரு டிரில்லியன். 60 டிரில்லியன்னா இப்போ எவ்வளவுன்னு கணக்கு பண்ணிக்கோங்க, உச்சந்தலையிலயிருந்து காலில் இருக்கிற சுண்டு விரல் வரைக்கும் எல்லா உறுப்புகளுக்கும் தேவையான சத்துக்களைக் கொண்டு போய் கொடுக்கிறது இந்த செல்கள்தான். செய்தி கொடுக்கிறதும் இதுங்கதான். கொரியர் பாய் வேலை செய்யுதுங்க.
2. பிளட் வெசல்ஸ் அதாவது ரத்த நாளங்கள். எவ்வளவு நீளம் இருக்கு தெரியுமா? மயக்கம் போட்றாதீங்க. 75000 மைல்கள் நீளம். இந்த பூமியை சுத்திட்டு வந்திடலாம். அவ்வளவு நீளம் இருக்கு.
3. பிரைன் அதாவது மூளை 3 பவுண்டுக்கும் கம்மிதான். ஆனா அதுல 30 மில்லியன் நியூரான்கள் இருக்குது. தகவல் தொடர்புக்குன்னே 250 பில்லியன் கிளேயல் செல்கள் இருக்குது.
4. கிட்னி தம்மாத்துண்டு ரெண்டு இருக்கு. வெறும் 140 கிராம்தான். ஆனா இதுல ஒரு லட்சத்திற்கும் அதிகமாக நெப்ரான்ஸ் இருக்கின்றன. வடிகட்டும் டியூப்பின் நீளம் 105 கி.மீ. உடம்பில் இருக்கிற இரத்தத்தை மூணு மணி நேரத்துக்கு ஒரு தடவை இது பில்டர் பண்ணிக்கிட்டு இருக்குது.
5. கண்-ஒவ்வொரு கண்ணுலயும் கருப்பு, வெள்ளையை பார்ப்பதற்கு உதவும் சின்னச் சின்ன ராடுகள் 130 மில்லியன் இருக்குது. கலரா பாக்குறதுக்கு 7 மில்லியன் ராடுகள் இருக்குது. ஒரே சமயத்தில் 1.5 மில்லியன் செய்திகளைப் பெறமுடியும். நம் கண்கள் செய்யும் செயல்களை மெக்கானிக்கலாவோ / மேனுவலாகவோ / நார்மலாகவோ செய்யுறதுக்கு 2.5 லட்சம் டெல் டிரான்ஸ்மிட்டர்களும், ரிசீவர்களும் தேவைப்படும்.
6. இருதயம்-ஒவ்வொரு வருடமும் இருதயம் 40 மில்லியன் தடவை துடிக்கிறது. தினமும் தலையிலிருந்து கால் வரை ஒரு லட்சம் கிலோ மீட்டர் இரத்த நாளங்களுக்கு இரத்தத்தை பம்ப் செய்கிறது.
7. தைராய்டு கிளாண்டு தினமும் 5000ல ஒரு பாகம் அயோடின் மாத்திரம்தான் தேவைப்படும். இந்த அளவு ஒரு குழந்தையிடம் குறைந்தால் கூட, அது மனநிலை பாதிக்கப்பட்ட (மென்ட்டலி ரிட்டார்டா) ஒரு குழந்தையாக ஆக்கிவிடும்.
8. எலும்புகள் - 200க்கும் அதிகமான எலும்புகள் நம் உடம்பில் உள்ளன. கைகளில் மாத்திரம் 19 எலும்புகள் இருக்கு. மணிகட்ல 8 எலும்புகள், பாதத்தில் இருக்கிற ஆங்கில் எலும்புகள் (Ankle Bones) பின்பக்கமாக வளைந்து, குதிங்காலை பலப்படுத்தி, முன்பக்கம் நீண்டு நாம் நிற்கும்போதும், நடக்கும்போதும், ஓடும்போதும், குதிக்கும் போதும் நாம் ஒரு பேலன்ஸோடு இருக்கவும், அதிர்வுகளைத் தாங்கவும் உதவுகின்றன.

- சுவி. டாக்டர். எஸ். தாயப்பன் அவர்கள் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

## வார்த்தைகள் செய்யும் ஜாலங்கள்

மொழியானது எல்லா உறவுகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மொழியின் மூலமாகத்தான் நாம் நம்முடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். எல்லாப் படைப்புகளிலும் மனிதனுக்கு மாத்திரமே வார்த்தைகளால் பேச வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. நாம் பேசும் வார்த்தையானது வல்லமையுள்ளது. ஆதியிலே தேவன் சகலத்தையும் வார்த்தையினாலே சிருஷ்டித்தார். வார்த்தையினாலே இயேசு கிறிஸ்து பிணியாளிகளை சொஸ்தமாக்கினார்; தேவையுள்ளோரின் தேவைகளைச் சந்தித்தார், மனமுடைந்தோரை ஆறுதல் படுத்தினார். வார்த்தைக்கு இருதயத்தை சொஸ்தப்படுத்தவும் காயப்படுத்தவும் வல்லமையுண்டு. வார்த்தை ஆவியை உயிர்ப்பிக்கவும், கொல்லவும் முடியும்; வார்த்தை உறவைச் சீராக்கவும், சீரழிக்கவும் முடியும். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது என்று நம்முடைய வேதம் கூறுகிறது (நீதி.18:21). ஆகவே இந்த ஆண்டு நம்முடைய அன்றாட வாழ்வில் வார்த்தையானது எப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்பதை நடைமுறை உதாரணங்களைக் கொண்டு பார்க்கலாம்.

**என்னை மன்னித்து விடுங்கள் I AM SORRY** (லூக்கா 15:17-24)

ஒரு சில நேரங்களில் நாம் தெரிந்தோ தெரியாமலோ மற்றவர்களைக் காயப்படுத்தி விடுகிறோம். உன் சகோதரனைக் காயப்படுத்துவது பாவம் என்று இயேசு சொல்கிறார். நம்முடைய குற்றங்களை ஒப்புக்கொள்வதோடு மற்றவர்களை காயப்படுத்தியிருப்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். “என்னை மன்னியுங்கள்” என்று நாம் சொல்லும் பட்சத்தில் நம்முடைய மனதும் சுத்தமாகும். மற்றவருடைய காயத்தையும் ஆற்ற முடியும். உடைந்த உறவு அதன் மூலம் சரி செய்யப்படும். கெட்ட குமாரன் தன் தவற்றை உணர்ந்து தன் தகப்பனிடத்தில் வந்து “என்னை மன்னியுங்கள்” என்று சொன்னான். அவன் தகப்பன் அவனை மன்னித்தபோது அந்த வீட்டுக்குப் பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்று.

**நன்றி THANK YOU** (லூக்கா 17:11-19)

‘‘நன்றி’’ என்ற வார்த்தை அதை சொல்லுபவருக்கு மிகுந்த மனமகிழ்ச்சியைத் தரவல்லது. அதே சமயம் அதைக் கேட்பவர் உள்ளத்திலும் சமாதானத்தையும் தரவல்லது. நன்றி சொல்லும்போது அது உறவுகளைத் தட்டி எழுப்ப வல்லதாயிருக்கிறது. ஒன்பது குஷ்டரோகி இயேசுவிடம் வந்து நன்றி தெரிவிக்காவிட்டாலும், வந்து நன்றி தெரிவித்த ஒரே குஷ்டரோகியின் நிமித்தம் இயேசு மிகுந்த சந்தோஷப்பட்டார். நன்றியில்லா இருதயம் குளிர்ந்து கெட்டதாயிருக்கிறது; ஆனால் நன்றியுள்ள இருதயமானது சந்தோஷமும் மிகுந்த மகிழ்ச்சி நிறைந்ததுமாயிருக்கிறது.

**பரவாயில்லை IT IS ALRIGHT** (யோவான் 8:1-4)

நமக்கு விரோதமாய் தவறு செய்தவர்கள் மன வருந்தும்போது “பரவாயில்லை, மன்னித்துவிட்டேன்” என்று நீங்கள் சொல்வீர்களானால், நீங்கள் காயப்படவில்லை என்பதையும், நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள் என்பதையும்

அந்த வார்த்தை தெரியப்படுத்துகிறது. இயேசு "இனிப்பாவம் செய்யாதே" என்று மனதுருகி அவனைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று மரணத் தீர்ப்பு வழங்கிய மதத்தலைவர்களுக்கு மத்தியில் அந்த வார்த்தையைச் சொன்னார். இதன் மூலம் இயேசு பாவம் செய்த அந்த பெண்ணிடம் "பரவாயில்லை" என்கிற அர்த்தம் கொள்ளும் வார்த்தையைக் கூறினார். உன்னை ஏற்றுக் கொள்கிறேன். பழையவைகளை நினைத்துக் கவலைப்படாதே என்று கூறினார்.

**நீ நல்லதையே செய்தாய் YOU DID A GOOD THING** (மாற்கு 14:3-9)

நாம் நமக்கு மேலானோர், நமக்குக் கீழானோர் மற்றும் நம்மைச் சுற்றிலும் இருப்போருடைய அங்கீகாரத்தை எதிர்பார்ப்பது இயல்பு. அங்கீகாரம் கிடைக்காத இடத்தில் நாம் சோர்ந்துபோக வாய்ப்புண்டு அல்லது எதிர்த்து நிற்க ஏதுவுண்டாகும். விலையேறப் பெற்ற நளதம் என்னும் உத்தம தைலத்தை மரியாள் உடைத்து அவர் சிரசின் மேல் ஊற்றினபோது சீஷர்களில் சிலர் முறுமுறுத்தனர். ஆனால் இயேசுவோ "தன்னால் இயன்றதைச் செய்தாள்; என்னிடத்தில் நற்கிரியைகளை செய்திருக்கிறாள்" என்று சொல்லி மெச்சிக்கொண்டார். பாராட்டு மற்றவர்களை ஆவியிலே உற்சாகமடையச் செய்யும். பாராட்டு இல்லாத இடத்தில் மனதிலே சோர்வை கொண்டு வரும்.

**சிறப்பாய் செய்துள்ளாய் EXCELLENT** (மத்தேயு 16:13-19 / ரோமர் 12:5)

உன்னுடைய சகோதரனோ அல்லது சகோதரியோ ஒரு தேர்வில் வெற்றி பெறும் போது அல்லது ஒருவர் ஒரு காரியத்திலே சிறப்பான சாதனைப் படைக்கும் போது நாம் என்ன சொல்லிப் பாராட்டுவோம். "வாழ்த்துக்கள்; எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த சாதனை படைத்துவிட்டாய்" என்று சொல்லுவோம் அல்லவா? இப்படி சொல்லும்போது உன் சகோதரனுடைய வெற்றியில், சாதனையில் நீ பொறாமைபடாமல் மிகவும் மகிழ்ச்சியடைகிறாய் என்று பொருள். அது உன் இருதயத்தை ஆசீர்வதிக்கும். சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்பட வேண்டும். மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று பேதுரு அறிக்கை செய்தபோது இயேசு அவனைப் பாராட்டி மகிழ்ந்தார்.

**நான் உன்னை நேசிக்கிறேன் I LOVE YOU** (யோவான் 13:34 / 1யோவான் 4:10-12)

அன்பு தான் கிறிஸ்தவத்தின் சாராம்சம். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. கல்வாரி சிலுவையிலே தம்முடைய அன்பை வெளிப்படுத்திவிட்டார். நான் அன்பாயிருப்பது போலவே நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார். நாம் மற்றவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்பதல்ல. நம்முடைய அன்பை வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டும். நான் உன்னை நேசிக்கிறேன் என்று நாம் சொல்லும்போது அது மற்றவருடைய இதயத்தைத் தொட வேண்டும். வார்த்தையானது அற்புதங்களைச் செய்யும். அது மற்றவருடைய காயத்தை ஆற்றவல்லது. மற்றவருடைய இருதயத்தைச் சரிசெய்ய வல்லது; அது ஆத்துமாவை உயிர்பெறச் செய்ய வல்லது.

ஆகவே மேற்கூறிய வார்த்தைகளை அந்தந்த சூழ்நிலைகளில் அடிக்கடி பயன்படுத்துவோம்! உறவுகளை கட்டுவோம்! தேவனை மகிமைப்படுத்துவோம்!



# எரேமியாவின் புலம்பல்

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

இஸ்ரவேல் ஜனங்களின் பாவத்தினிமித்தம் வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் அசீரியர்களால் கிமு722ம் வருடத்தில் முறியடிக்கப்பட்டு பத்து கோத்திரங்களும் சிறைக்கைதிகளாக அசீரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இந்த விபரங்கள் 2இரா 17ம் அதிகாரத்தில் விபரமாக தரப்பட்டுள்ளது.

2இரா.17,18,19இல் நாம் வாசிக்கிறபடி "...யூதா கோத்திரம் மாத்திரமே மீதியாயிருந்தது. யூதா ஜனங்களும் தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் இஸ்ரவேல் விக்கிரக வழிபாடுகளில் நடந்தார்கள்". எனவே கிமு586-ல் தெற்கு ராஜ்யமாகிய யூதாவும் பாபிலோனியரால் அழிக்கப்பட்டது. ஜனங்கள் பாபிலோனுக்கு நாடுகடத்திக் கொண்டுபோகப்பட்டனர். இந்த விபரங்களை 2இரா 25ம் அதிகாரத்தில் (25:21) வாசித்தறிகிறோம்.

அப்போது எரேமியா தீர்க்கதரிசி அங்கு ஊழியம் செய்து கொண்டிருந்தான். கிட்டத்தட்ட நாற்பது ஆண்டு காலங்கள் (கிமு 627-586) யூதாவில் ஊழியம் செய்து மக்களை யெகோவா தேவனிடம் திருப்பிக்கொண்டுவர பிரயாசப்பட்ட தீர்க்கன் யூதாவின் சிறையிருப்பையும், எருசலேமின் அழிவையும், தேவாலயத்தின் இடிபாடுகளையும் கண்டான். இதனைக் கண்டு இதயம் உடைய கண்ணீர்விட்டுப் புலம்பி மரண ஓலமிட்டு அழுதான். அவனது மரண ஓலப்பாடல்களே "எரேமியாவின் புலம்பல்" என்று நமது வேதாகமத்தில் தரப்பட்டுள்ளது.

### எரேமியாவின் கோட்டை : (Jeremiah's Gretto)

கொல்கொதா மலையில் ஒரு குகை இருந்தது. அக்குகை "எரேமியாவின் கோட்டை" என்று அழைக்கப்பட்டது. இதனை "மண்டை ஓட்டுப்பாறை" என்றும் அழைத்தனர். இந்த மண்டை ஓட்டுப்பாறையின் உச்சியிலிருந்து பார்த்தால் எருசலேம் பட்டணம் முழுவதையும் பார்க்க முடியும். இந்த மண்டை ஓட்டுப்பாறையின் உச்சியிலிருந்து கீழே பார்க்கையில் எருசலேம் பட்டணத்தின் உருவழிந்த, நிலையை மிகத்துல்லியமாக எரேமியா கண்டான். இடித்தழிக்கப்பட்ட பட்டணமும் அதன் மதில் சுவர்களும், உருவழிந்த தேவாலயமும் அவனுக்கு தெரிந்தன. பாழாக்கப்பட்ட எருசலேமையும் தேவாலயத்தையும் கண்ட எரேமியா புலம்பி ஓலமிட்டு அழுதான். அவனது புலம்பல் மரணஓலப்பாடல்களாகத் தொனித்தன. அவை ஐந்து பாடல்களாகத் தொகுக்கப்பட்டன. அதுவே 'புலம்பல்' புத்தகம் ஆகும்.

### புத்தக ஆசிரியர் எரேமியா:

எருசலேம் அழிக்கப்பட்டபோது எரேமியா 50 வயதுக்கு மேற்பட்டவனா யிருந்திருக்க வேண்டும். அழிக்கப்பட்ட யூதாவும் அதில் எஞ்சி விடப்பட்டிருந்த கொஞ்ச ஜனங்களும் பாபிலோனியரின் ஆளுகையின்கீழ் வந்தன. எனவே, பாபிலோனிய மன்னனின் பராமரிப்பில் எரேமியா யூதாவிலேயே தங்கியிருக்க விரும்பினான். ஆகிலும், அவனுடைய விருப்பத்துக்கு மாறாக எஞ்சிவிடப்பட்டிருந்த யூதாவின் ஜனங்கள் அவனை எகிப்துக்கு இழுத்துச் சென்றுவிட்டனர். அங்கு அவன் தனது சொந்த ஜனங்களாலேயே கொலைசெய்யப்பட்டு இரத்தசாட்சியாக மரித்திருக்க

வேண்டும் என்று நம்பப்படுகிறது. எனவே எகிப்துக்குத் தான் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பாகவே கிமு 585ம் வருடத்தில் புலம்பல் புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும் எனக் கணிக்கலாம். எரேமியா 41 முதல் 44 வரையுள்ள அதிகாரங்கள் இப்பின்னணியை நமக்குத் தருகிறது.

## எருசலேமின் அழிவில் நடந்தவை என்ன?

- கிமு 931ல் சாலொமோன் ஆட்சிக்குப்பின்பு ராஜ்யம் பிளவுற்றது. பிளவுற்ற ராஜ்யத்தின் தெற்கு ராஜ்யத்தில் கிமு 931முதல் 586வரை 20 அரசர்கள் தாவீதின் வம்சத்திலிருந்து ஆண்டு வந்தனர். (1இரா.12அதி - 2இரா.25 அதி). இவர்கள் ஆண்டுவந்த சுமார் 450 ஆண்டு கால முடியாட்சி அவமானப்படத்தக்க நிலையில் ஒரு முடிவுக்கு வந்தது.
- எருசலேம் அழிக்கப்பட்டபோது, அதன் மதிற்சுவர்கள் இடித்துத் தள்ளப்பட்டன. ராஜ அரண்மனை தரைமட்டமாக்கப்பட்டது. பட்டணம் தீக்கிரையாக்கப் பட்டது.
- யூதாவின் மன்னர்களும், மக்களும் பரிதாபகரமாக நாடுகடத்தப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சிதேக்கியா என்ற அதன் கடைசி அரசனை பாபிலோனியர் கொன்றுபோட்டனர்.

தனது உறவினர் ஒருவரின் துயர மரணத்தில் புலம்பி அழுபவர்போல எரேமியா எருசலேமின் அழிவுக்காக அழுது புலம்பல் பாடினான்; ஒப்பாரி வைத்தான் என்றே சொல்லலாம்.

இந்த அழிவின் சோகம் சாதாரணமாக நிகழ்ந்துவிடவில்லை; பலநூறு ஆண்டுகளாக யூதாவின் அரசர்களும், தலைவர்களும், குடிமக்களும் கர்த்தருக்கு விரோதமாகச் செய்த கலகத்தின் விளைவே இச்சோக முடிவின் பின்னணியாகும். இந்த அழிவு தேவனுடைய நீதியின் நிறைவேற்றமே என்று எரேமியா கண்டான்.

"அவர் இரக்கமும் மனதுருக்கமும் உள்ள தேவன்" என்று புலம்பல் 3:22,23,32 ஆகிய வசனங்களில் உள்ளம் உடைய புலம்புகிறான்; நம்பிக்கையின் புலம்பலை பாருங்கள்.

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.

"அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார்".

நியாயத்தீர்ப்பைப் பெற்றுள்ள தங்கள் விரக்தியின் வாழ்க்கையிலும் தேவன் தங்களை மீண்டும் மறுசீரமைப்பார் என்ற நம்பிக்கையையும் புலம்பல் புத்தகத்தில் காண்கிறோம்.

## புலம்பல் புத்தகத்தின் எழுத்துநடை:

## அகர வரிசைப்பாடல்கள் (Acrostic Poem)

எரேமியாவின் மரண ஓலப் புலம்பல்கள் ஐந்து பாடல்களாகும். அவை நமக்கு ஐந்து அதிகாரங்களாகத் தரப்பட்டுள்ளன. எளிதாக மனப்பாடம் செய்வதற்கும் நினைவில் வைப்பதற்கும் வசதியாக இவை அகர வரிசையில் எழுதப்பட்டுள்ளன.

மூன்று அதிகாரங்களில் ஒவ்வொன்றிலும் 22 வசனங்கள் உள்ளன. எபிரெய மொழியில் மொத்தமுள்ள எழுத்துக்கள் 22 ஆகும். எனவே ஒவ்வொரு வசனமும் வரிசையாக ஒவ்வொரு எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றனர்.

முதல் எழுத்து "ஆலெப்" கடைசி எழுத்து "தௌ". 22 வசனங்களும் முதலெழுத்தில் ஆரம்பித்து கடைசி எழுத்தில் முடிகிறது. 3ம் அதிகாரத்தில் 66

வசனங்கள் உள்ளன. அவை மூன்று வசனங்களைக்கொண்ட 22 பகுதிகளாகப் பகுக்கப்பட்டு அகர வரிசைக் கவிதைகளாகவே தரப்பட்டுள்ளன.

5ம்அதிகாரம் 22 வசனங்களைக் கொண்டதாகயிருந்தாலும் அவை அகர வரிசையில் தரப்படவில்லை.

119ம் சங்கீதமும் இப்படி அகரவரிசையில் எழுதப்பட்டதே. அதிலுள்ள 176 வசனங்களும் எபிரெய எழுத்துக்களின் இலக்கத்தின்படியே 22 பகுதிகளாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியின் முதல் வசனமும் முறையே எபிரெய எழுத்துக்களை வரிசையாகக் கொண்டு ஆரம்பிக்கின்றன.

119:169 கடைசி எழுத்தாகிய “தௌ”-ல் முடிகிறதைக் கவனியுங்கள்.

அப்படியே சங்கீதங்களில் 9,10,24,34,37,145 ஆகியவை இவ்வித அகரவரிசைப் பாடல்களாக எழுதப்பட்டவையாகும்.

எனவே எரேமியா பாடிய புலம்பல் மனப்பாடம் செய்யப்பட்டு, பல காலங்களாக மக்களால் பாடப்பட்டு வந்தன எனலாம். ஒவ்வொரு வருடமும் ஆபிப் மாதம் 9ம்தேதி எருசலேமின் அழிவை நினைவுகூர்ந்து யூதர்கள் இப்பாடல்களைப் பாடி வந்தனர்.

புலம்பல் புத்தகத்தில் “ஆலெப்” என்ற முதல் எழுத்தில் ஆரம்பித்து கடைசி எழுத்தாகிய “தௌ”-ல் ஒவ்வொரு பாடலும் முடிவதுபோல் தீர்க்கன் எரேமியாவின் தீர்க்கதரிசனப் புலம்பலுக்கும் ஒரு முடிவு உண்டு; சிறையிருப்பில் சென்றவர்கள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தவும் இந்த எழுத்துநடை பயன்படுத்தப்பட்டது எனலாம்.

### புலம்பல் புத்தகத்தின் பொருளடக்கம்:

இப்புத்தகத்திலுள்ள ஐந்து அதிகாரங்களையும் ஐந்து புலம்பல் பாடல்கள் எனத் தலைப்பிடலாம்.

### 1ம் பாடல் (அதி.1)

யூதா ஜனங்கள் தேவனையும், அவருடனுள்ள தங்கள் உடன்படிக்கையை யும், அவரது தீர்க்கதரிசிகளையும் நிராகரித்துவிட்டனர். எனவே, எருசலேமின் அழிவு ஒரு தேசம் இன்னொரு தேசத்துக்கு விரோதமாக எழும்பிவந்து இராணுவம் கொண்டு அவர்களை அழித்துவிட்ட நிகழ்வு அல்ல; மாறாக, இது மாபெரும் ஆவிக்குரிய வீழ்ச்சியின் விளைவாகும்.

தேவனுடைய மிகப்பெரிய கோபத்தினால் பேரழிவைக் கண்ட எருசலேமைப் பார்த்து ஆத்தும வியாகுலத்தோடு தேவனை நோக்கி அழுது புலம்பும் எரேமியாவை இங்கு பார்க்கிறோம்.

### 2ம் பாடல் (அதி. 2)

தேவனுடைய கோபத்துக்குரிய காரணத்தை எரேமியா இங்கு விவரிக்கிறான். யூதாவின் விசுவாசத்துரோகமும், விக்கிரக ஆராதனையுமே இந்நிலை வரை அவர்களைக்கொண்டு வந்தது. யூதாவுக்கு விரோதமாய் வந்த பகைஞர்களே தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கருவிகளாக பயன்படுத்தப்பட்டனர்.

### 3ம் பாடல் (அதி. 3)

பகைஞராகிய பாபிலோனியரை தமது ஜனங்களைத் தண்டிக்கும் கருவிகளாக தேவன் பயன்படுத்தினாலும், கர்த்தர் இன்னும் இரக்கமும் உண்மையுமுள்ளவராய் இருக்கிறார். இதை உணர்ந்து அவர்கள் தேவன்மேல் இன்னும் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதே இப்பாடலின் சுருக்கம்.

### 4ம்பாடல் (அதி. 4)

இப்பாடல் முதல் மூன்று பாடல்களிலுள்ள தொகுப்பாகவும், பொழிப்புரையாகவும் அமைந்துள்ளது. தேவன் பாவத்துக்குத் தண்டனை தருவார். தண்டனையை அனுபவிப்போர் மனந்திரும்பி தேவனிடம் வரவேண்டும். தேவன் இன்னும் இரக்கமுள்ளவராகவேயிருக்கிறார் என்பதே இப்பாடலின் கருத்து.

### 5ம் பாடல் (அதி. 5)

யூதாவின் பாவங்களுக்காகப் பாவ அறிக்கைசெய்து புலம்புகிற எரேமியாவை இப்பாடலில் பார்க்கிறோம். தேவனுடைய இரக்கத்துக்காகவும் கெஞ்சுகிறான். தமது மக்களுக்கு தேவன் உதவி செய்து அவர்களைத் திரும்பவும் உயிர்ப்பிக்க வேண்டும் என்பதே தீர்க்கதரிசியின் விண்ணப்பப் பாடலாகும்.

### புலம்பல் புத்தகம் தரும் ஆவிக்குரிய செய்தி:

இன்று இப்பாடல்களை ஒவ்வொருவரும் கருத்தூன்றி வாசிக்க வேண்டும். அவை நமக்குத் தெரிவிக்கும் பாவத்தின் மிகப்பயங்கரமான விளைவுகளை மனதிற்கொள்ள வேண்டும். பாவம் நிச்சயமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும். இதன் வெளிச்சத்தில் ரோமர் 1:18 முதல் 3:20 வரை பவுல் தரும் வேத சத்தியங்களை ஒப்பிட்டு வாசித்துப் பயனடைய வேண்டும்.

- புறஜாதியார் தேவனை அறிந்தவர்களே; எனினும் அவரை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; எனவே அவர்கள் தேவனுக்கு முன்பாக குற்றமுடையவர்களே.
- யூதர்கள் தேவப்பிரமாணத்தைப் பெற்றும் மேசியாவாகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அவர்களும் தேவனுக்கு முன்பாக குற்றமுடையவர்களே.

ஆக, யூதர்களாலும் புறஜாதியாராலும் நிறைந்த இவ்வுலகம் தேவனுக்கு முன்பாக குற்றமுடையவர்கள்.

இரக்கமும் உண்மையுமுள்ள தேவனிடத்தில் அவர்கள் மனந்திரும்பினால் அவர் இரங்கி, மன்னித்து அனைவரையும் சேர்த்துக்கொள்ளுவார்.

அன்று அழிந்துவிட்ட எருசலேமுக்காக எரேமியா புலம்பிக் கண்ணீர் வடித்ததுபோல நமது இரட்சகரும் கிபி 70ல் ரோமர்களால் அழிக்கப்படப் போகிற எருசலேமைப் பார்த்து கண்ணீர் வடித்தார்.

மத் 23:37-38 வசனங்களை இக்கட்டுரையின் முடிவாகத் தருகிறோம்.

“எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளை கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்”.

- எரேமியாவின் காலத்தில் எருசலேம் அழிந்தது. அவன் அழுது புலம்பினான்.
- இயேசுவின் கண்ணீருக்குப் பின்பு எருசலேம் மீண்டும் அழிந்தது.
- இன்று நமக்கு முன்பு நடக்கிற சரித்திர நிகழ்வுகளைத் ஆராய்ந்து பார்த்து இவ்வுலகம் அழிந்துப்போகாமல் இருக்க இயேசுவைச் சார்ந்து பரிசுத்தமாய் வாழுவோமாக. நமக்கொரு உயிர் மீட்சி நிச்சயம் உண்டு.



# அனலாயிருங்கள்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்வாண்டின் துவக்கத்தில், ஆண்டவரோடு நமக்குள்ள ஐக்கியத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை எப்படி சரிசெய்து, அவ்வக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளமுடியும் என்று பார்ப்போம்.

### லவோதிக்கேயா சபை

லவோதிக்கேயா சபையின் மூலம் தேவன் நமக்கு கற்பிக்கும் பாடங்களை குறித்து கூற விரும்புகிறேன். சகலவற்றையும் உண்டாக்கின ஆமென் என்பவர், லவோதிக்கேயா சபையைப் பார்த்து, அவர்கள் அனலுமில்லாமல், குளிருமில்லாமல் இருப்பதாக கூறுகிறார். வெளி.3:15,16. நாம் அனலாக இருக்கவேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். ஆவியில் அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள் என்று ரோமர் 12:11-ல், வாசிக்கிறோம். அனலாயிருந்து, கர்த்தருக்கு ஊழியஞ் செய்ய கர்த்தர் எதிர்பார்க்கிறார். அனலுமின்றி, குளிருமின்றி வெதுவெதுப்பாக இருப்போமென்றால், ஆண்டவர் தம்முடைய வாயினின்று நம்மை வாந்திபண்ணி போடுவேன் என்கிறார். அதாவது, நாம் சபையில் எவ்வகை ஊழியமும் செய்யாமல், எதிலும் பங்குபெறாமல், வெறுமனே வந்து போகிறவர்களாக, வெதுவெதுப்பாக இருப்போமானால், தேவன் தம்முடைய சரீரமாகிய சபையினின்று நம்மை வெளியே தள்ளிவிடுவார்.

அப்படிப்பட்டவர்கள் நிர்ப்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரர்களும், குருடரும், நிர்வாணிகளுமாயிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்கள் பார்வைக்கு ஐசுவரியவான்களாகவும், திரவிய சம்பன்னர்களாகவும் காணப்படுவார்கள். எனக்கு ஒரு குறைவுமில்லை என்று சொல்லிக்கொள்வார்கள். பெரிய சபையில் அங்கம் வகிக்கிறேன், தசமபாகம், காணிக்கை, அருட்பணி காணிக்கை, கட்டிடநிதி எல்லாம் தவறாமல் செலுத்துகிறேன் என்பார்கள். ஆனால், தேவன் எதிர்பார்ப்பது, அதைவிட மேலான அனலுள்ள வாழ்க்கையாகும். எம்மாவூர் சீஷர்களின் இருதயம் ஆண்டவருடைய வார்த்தையை கேட்டபோதும், அப்பம் பிட்கும்போதும், கொழுந்துவிட்டெரிந்தது போல நம் இருதயங்களும், திருவிருந்தில் பங்குகொள்ளும்போதும், கர்த்தருடைய வார்த்தையை கேட்கும்போதும் கொழுந்து விட்டெரிவதாக.

### ஆண்டவரின் ஆலோசனை

#### புடமிடப்பட்ட பொன்

வாந்தி பண்ணிப்போடப்பட்ட நிலைமையிலுள்ளவர்களின் நிலைமை மாறவும், திரும்பவும் அக்கினியாய் மாறவும், அவர்கள், நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை தேவனிடத்தில் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று தேவன் ஆலோசனை கூறுகிறார். வெளி.3:18. புடமிடப்பட்ட பொன் என்பது தெய்வீக சுபாவமாகும் (Divine

character/nature). பொன் அக்கினியில் சுத்தமாவது போல, நாமும் பலவித சோதனைகளின் ஊடாக கடந்து போவதின் மூலம் பூரணப்படுகிறோம். சோதனையானது பொறுமையையும், தாழ்மையையும், உருவாக்குகிறது. பக்தனாகிய யோபு, "அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" என்று கூறுகிறார். இயேசு கிறிஸ்துவானவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (எபிரெயர் 5:8). அனனியா, சப்பீராள் வெளிப்பிரகாரமாக தவறு செய்யாததைப் போலக் காணப்பட்டாலும், பரிசுத்த ஆவியானவருக்கு முன்பாக பொய் பேசுகிறவர்களாகக் காணப்பட்டனர். நாம் எப்படி காணப்படுகிறோம்? நம்முடைய ரகசிய வாழ்க்கை எப்படி இருக்கின்றது? நாம் தனிமையாய் இருக்கும் நேரங்கள் ஆண்டவருக்குப் பிரியமானதாக இருக்கின்றதா? எதை பார்க்கிறோம்? எதைக் கேட்கிறோம்? கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீ பாக்கியவதி. கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் பாக்கியவான். குடும்ப வாழ்வில் விட்டுக்கொடுத்தல், மன்னித்தல், பொறுமை ஆகிய நற்பண்புகள் காணப்பட வேண்டும். வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ அங்கே சகலவித துர்க்கிரியைகளும் காணப்படும். மற்றவர்கள், நமக்கு தீமை செய்யும்போது, எந்த அநியாமும் செய்யாமல் பாடுபட்ட ஆண்டவரை நினைத்துக் கொள்ளுங்கள். தெய்வீக குணாதிசயங்கள் வளர, இயேசுவைப் பாருங்கள். அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறார். மனத்தாழ்மையில் அவர் முனைவர் (Ph.D) பட்டம் பெற்றவர். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றவர். அவரைப் பின்பற்றி அவரைப்போல. புடமிடப்பட்டப் பொன்னாக மாறுவோம்.

### வெண்வஸ்திரங்கள்

உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை என்னிடத்தில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஆண்டவர் கூறுகிறார். ஒருநாள், நாம் அனைவரும் கிறிஸ்துவுக்கு மணவாட்டிகளாக ஆகப் போகிறோம். இயேசுவானவர் வருவதற்கு ஆவலாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தரித்துக் கொள்ளும்படி சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே (வெளி.19:8). வெளிப்பிரகாரமான வெண்வஸ்திரம் அல்ல. நீதியாகிய வஸ்திரம். நாம் நீதியாக நடக்க வேண்டும். Righteousness is right standing with God. நீதி என்பது தேவனோடு சரியான நிலையில் நிற்பது, அதாவது தேவன் எவைகளை (நீதியாக) சரியென்று எண்ணுகிறாரோ அதே நிலைப்பாட்டை நாமும் கொண்டிருப்பதாகும். கறைபடாத மெல்லிய வெண் வஸ்திரம் தரித்தவர்களாக மாற வேண்டும். கரைதிரையற்ற பரிசுத்த வாழ்வு வாழவேண்டும். மாம்சத்தின் கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும்.

### கண்களுக்கு கலிக்கம்

நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் (வெளி.3:18). பார்வை நன்றாக இருக்கும்போது மட்டுமே தரிசனம் நன்றாகத் தெரியும். தரிசனமில்லாத, கண் சொருகிபோனவர்களாயிருக்கக் கூடாது. பார்வை குறைவுள்ள நம் கண்கள் தெளிவடையும்படியும், நன்கு பார்க்கும்படியும், தேவன் பரலோக களிம்பை நமக்குத் தருகிறார். அந்த கண்மருந்து நம் பார்வையை அதிக தெளிவுள்ளதாக்கும். நமக்கும் பேலியாளுக்கும், நாம் விட்டுவிட்டு வந்த ஆராதனைகளுக்கும் சம்பந்தமில்லை. நம் தரிசனம் சீஷர்களாக மாறி ஆண்டவரைப் பின்பற்றுவது மட்டுமல்ல.

மற்றவர்களையும் சீஷர்களாக மாற்றுவதாகும். சுவிசேஷம் அறிவிப்பது நமது கடமை. அறிவிக்காவிட்டால் நமக்கு ஐயோ! ஆபத்து என்று வேதம் கூறுகிறது. வேதத்தில் சொல்லப்பட்ட தாலந்துகள், தருணங்கலாகும். கிடைக்கும் அல்லது கொடுக்கப்படும் ஒவ்வொரு தருணங்களையும் பயன்படுத்தி நாம் சுவிசேஷத்தை சொல்லிவிட வேண்டும். நாம் அந்த நபர்களை திரும்ப பார்ப்போமா என்று தெரியாது. அப்படி கொடுக்கப்படும் தருணங்களைப் பயன்படுத்தி சுவிசேஷம் அறிவிப்போமானால், “உண்மையும் உத்தமுமான ஊழியனே” என்று ஆண்டவர் நம்மை வாழ்த்தி வரவேற்பார். சுவிசேஷம் சொல்ல தெரியாவிட்டால் அல்லது முடியாவிட்டால் சமாரிய ஸ்திரீயைப்போல, “வந்து பாருங்கள்” என்று சபைக்கு மக்களை அழைத்துக் கொண்டு வாருங்கள்.

இப்படி வெதுவெதுப்பான நிலையிலிருக்கும் சபை மக்களுக்கு, தேவன் ஒரு பொதுவான அழைப்பை (Open Invitation) கொடுக்கிறார் (வெளி 3:20). வாசற்படியில் நின்று கதவைத் தட்டும் நேசருக்கு நாம் கதவைத் திறப்போமானால், அவர் உள்ளே பிரவேசித்து நம்மோடு போஜனம் பண்ணுவார். போஜனம் பண்ணுவதென்பது ஐக்கியத்தைக் குறிக்கின்றது. இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1 கொரி.1:9). அவர் நம்மை வற்புறுத்துவதில்லை. நாம் தான் திறக்க வேண்டும். ஐக்கியப்பட்டு, அனலாக மாற்ற கதவண்டை காத்துக்கொண்டிருக்கிறார். அவரை சந்திக்க அதிகாலையில் ஆயத்தமாகி மோசேயைப் போல அவர் சமுகத்தில் வந்து நிற்போம். அவரைப் போல தலை குனிந்து பணிந்து கொள்வோம். அது அவரை ஆராதிப்பது ஆகும். பின்பு, தேவன் நமக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துவோம். பின்பு மற்றவர்களுக்காகவும், நமக்காகவும் ஜெபிப்போம்.

**அவரோடு ஆளுகை**

இப்படி தேவனோடு ஐக்கியம் கொண்டிருப்போமானால், சிங்காசனத்தில் அவரோடுகூட உட்காரும்படி நமக்கு அருள் செய்வார் (வெளி.3:21). நாம் அவருக்கு போஜன அறையை ஆயத்தப்படுத்துவோமானால், அவர் நமக்கு சிங்காசனத்தை ஆயத்தப்படுத்துவார். If we prepare a supper room for Him, He will prepare a throne room for us. வெதுவெதுப்பான நிலைமையை விட்டு எழும்பி அவரோடு ஐக்கியப்பட்டு, அவரோடு ஆளுகை செய்ய ஆயத்தமாவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! மாரநாதா!!!.

---


## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

## மூன்று மரங்கள்

ஒரு காட்டில் இருந்த மூன்று மரங்கள் தங்களுடைய கனவுகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தன.

முதல் மரம் சொல்லியது: 'ஒருநாள் நான் ஒரு அழகான மரப்பேழை ஆகவேண்டும். விலையுயர்ந்த பொருள்களையும் செல்வங்களையும் என்னுள் வைத்திருக்க வேண்டும்'.



இரண்டாவது மரம் சொல்லியது: 'நான் ஒரு பலமான பெரிய கப்பலாக வேண்டும். அரசர்களையும் ராணிகளையும் சீற்றம் மிகுந்த கடலிலும் கூட பாதுகாப்பாக சுமந்து செல்ல வேண்டும்'.

மூன்றாவது மரம் சொல்லியது: 'நான் இந்தக் காட்டிலேயே உயர்ந்த மரமாக வளர வேண்டும். விண்ணை முட்டும் என் உயரத்தைப் பார்த்து கடவுளுக்கு அருகில் நான் இருப்பதாக எண்ண வேண்டும்'.

சில காலம் கழித்து மரங்களை வெட்டுவதற்காக தச்சர்கள் வந்தார்கள்.

முதல் மரத்தின் அருகில் வந்தவர்கள் 'இது நல்ல பலமாக இருக்கிறது அதனால் இதை பெட்டிகள் செய்யும் தச்சனிடம் விற்றுவிடலாம்' என்றனர். மரத்திற்கும் தான் நினைத்தவாறே பேழையாகப் போவதை எண்ணி மகிழ்ச்சி.

இரண்டாம் மரத்திடம் வந்தவர்கள் 'இது கப்பல் செய்ய ஏதுவாக இருக்கும். எனவே துறைமுகத்தில் விற்று விடலாம்' என்ற முடிவுக்கு வந்தனர். தான் ஆசைப் பட்டவாறே பெரிய கப்பலாகப் போகிறோம் என்று எண்ணி மகிழ்ந்தது மரம்.

மூன்றாம் மரத்தைக் கண்டவர்கள் 'இதற்கு பெரிதாக எந்தத் தேவையும் இல்லை. அதனால் இதை கிடங்கில் போட்டு விடலாம்' என்று வெட்டிச் சென்றனர்.

தச்சனிடம் வந்த முதலாவது மரம், தீவனப் பெட்டியாக செய்யப்பட்டு, தொழுவத்தில் வைக்கோல் வைக்கப் பயன்படுத்தப்பட்டது. துறைமுகத்திற்கு கொண்டு சென்ற இரண்டாவது மரம் சிறு மீன்பிடி படகாக செய்யப்பட்டது. மூன்றாவது மரத்தை வெட்டி கிடங்கில் போட்டனர். இவ்வாறு மூன்று மரங்களின் கனவுகளும் தகர்க்கப்பட்டன.

காலம் சென்றது. மரங்களும் தங்களது கனவுகளை மறந்து விட்டன. ஒரு தொழுவத்திற்கு ஒரு ஆணும் பெண்ணும் வந்தனர். அப்போது அந்த பெண் ஒரு குழந்தையை ஈன்றெடுத்தாள். அந்தக் குழந்தையை முதல் மரத்தால் செய்யப்பட்ட தீவனப் பெட்டியிலிருந்த வைக்கோலில் வைத்தனர். அந்த நிமிடமே முதல் மரம் உணர்ந்தது, 'செல்வங்களில் எல்லாம் பெரிய செல்வம் என்னுள் வைக்கப்பட்டு இருக்கிறது' என்று.

சில வருடங்கள் கழித்து இரண்டாவது மரத்திலான படகில் சில பேர் கடலில் பயணித்துக் கொண்டிருந்தனர். அப்போது பெரிய புயல் வீசத் தொடங்கியது கண்டு தன் மேல் பயணிப்பவர்களை காப்பாற்ற முடியாதே என்று அஞ்சியது. அப்போது

படகில் இருந்த ஒருவர் புயலை நோக்கி ‘அமைதலாயிரு’ என்றார். உடனே கடல் சாந்தமானது. அப்போதே இரண்டாவது மரம் தெரிந்து கொண்டது அரசர்களுக்கெல்லாம் அரசனை நாம் சுமந்து கொண்டிருக்கிறோம் என்று.

சில நாட்கள் கழித்து மூன்றாவது மரத்தை சுமந்து கொண்டு ஒருவர் வீதியிலே சென்றார். வழியில் நின்றவர்கள் அவரைப் பார்த்து ஏளனம் செய்தனர். ஒரு குன்றை அடைந்ததும் அவரை அந்த மரத்திலேயே ஆணியால் அறைந்து செங்குத்தாக நிறுத்தினார். மூன்று நாட்கள் கழித்து மூன்றாவது மரம் உணர்ந்தது கடவுளின் அருகிலேயே அது இருந்ததை. அதில் அறையைப்பட்டிருந்தவர் இயேசு கிறிஸ்து.

மூன்று மரங்களுக்கும் அவைகள் விரும்பிய வழியில் எதுவும் நடக்கவில்லை, ஆனால் விரும்பியது நடந்தது. வழிதான் வேறு. நமக்கும் அது போல் தான், நாம் விரும்பிய வகையில் எதுவும் நடக்காமல் போகலாம். ஆனால் இறுதியில் நாம் விரும்பியதற்கும் மேலாக கண்டிப்பாக நடக்கும். நம்பிக்கைதானே வாழ்க்கை.

**நிச்சயமாக முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண்போகாது.**

## SOME CHRISTIAN RESOLUTIONS FOR THE NEW YEAR 2025

During the year I will:

Like PAUL, forget those things which are behind and press forward.

Like DAVID, lift up my eyes to the hills from where my help comes.

Like ABRAHAM, trust my God implicitly.

Like ENOCH, walk in daily fellowship with my heavenly Father.

Like MOSES, suffer rather than enjoy the pleasures of sin for a time.

Like CALEB and JOSHUA, refuse to be discouraged because of superior numbers.

Like JOB, be patient and faithful in all circumstances.

Like JOSEPH, turn my back on all evil advances.

Like GIDEON, advance even when my friends are few.

Like ANDREW, strive to lead my brother to Christ.

Like STEPHEN, manifest a forgiving spirit.

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# நவீன கிருபை உபதேசத்தின் தவறு!

**Rev.R.மதன்ராஜ்**
ஆசிரியர், மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகமக் கல்லூரி
Contributing Editor, Paripoorana Jeevan

தற்போது பெருகிவரும் கிருபை உபதேசம் வரலாற்றில் புதியதல்ல. ஆன்டிநோமியனிசம் (Antinomianism) என்று நூற்றாண்டுகளாய் திருச்சபைக்கு சவாலாய் நின்றிருந்த நம்பிக்கையே தற்போது கிருபை உபதேசமாய் உருவெடுத்துள்ளது. ஆன்டிநோமியனிசம் என்றால் "நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான'' என்று அர்த்தம். அதாவது, நாம் கிருபைக்கு பாத்திரவான்களாகியதால், நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட தேவையில்லை என்ற நம்பிக்கை. இலவச கிருபையை பெற்றுக்கொண்டதால், எந்த நியாயப்பிரமாண விதிமுறைக்கும் கீழ்ப்படியாமல் நம் விருப்பம்போல வாழலாம் என்று இவர்கள் பலமாய் நம்பினர். இந்த உபதேசமே தற்போது திருச்சபைகளில் கிருபை உபதேசமாய் வேரூன்ற துவங்கியிருக்கிறது.

கிருபை உபதேசமானது வேதத்திற்கு முற்றிலும் புறம்பானது. தேவனை கிருபையுள்ளவராகவும் இரக்கமுள்ளவராகவும் இந்த உபதேசம் அடையாளப்படுத்துவதில் எந்த தவறும் இல்லை. ஆனால் கிருபையை இவர்கள் மிகைப்படுத்தும் விதமானது, பாவ வாழ்க்கையை தூண்டும் அபாயத்தை ஏற்படுத்தி கிறிஸ்தவத்தை திசைமாற்றுகிறது. இன்று ஆவிக்குரிய திருச்சபைகளிலும் இப்போதனையின் தாக்கம் அதிகரித்துக்கொண்டு வருவதை நாம் பார்க்கக்கூடும். மேலும் இளைய தலைமுறைகளை ஈர்க்கும் வகையில், பாவம் என்று பாரம்பரியம் கருதி ஒதுக்கிய சில காரியங்களை சரியென்று இப்போதனையாளர்கள் அனுமதிக்கின்றனர். ஆகையினால் இன்று இளைய தலைமுறையினர் இப்போதனையினால் அதிகமாய் ஈர்க்கப்படுகின்றனர். பரிசுத்தத்திற்கும் பாவத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை சரியாய் பிரித்து காண்பிக்க இப்போதனை தவறுகிறது.

கிருபையை பாவம் செய்வதற்கான உரிமமாய் இப்போதனை கருதுகிறது. இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று வேதாகமம் இயேசுவின் இரத்தத்தின் சுத்திகரிக்கும் வல்லமையை முக்கியப்படுத்துவது நாம் அறிந்ததே. ஆனால் இவர்கள் வேதாகமத்தின் இந்த அடிப்படை சத்தியத்தை கையாளும் விதம் தவறானது. சகல பாவங்கள் என்றால், நேற்று செய்த பாவங்கள்; இன்று செய்கிற பாவங்கள்; நாளை செய்யப்போகிற பாவங்கள் என்று முக்காலத்தின் பாவங்களையும் உள்ளடக்குகிறது என்பதினால் நாளை நாம் செய்யப்போகிற பாவங்களையும் மன்னிக்க இயேசுவின் இரத்தத்திற்கு வல்லமை இருக்கிறது என்று பாவத்தை செய்ய தூண்டும் விதமாக போதிக்கப்படுகிறது. இவர்கள் வேதத்தை நின்று அணுகும் புள்ளி தவறானது.

ஒருவன் செய்யும் பாவத்திற்கு அவனுடைய சுயசித்தமே காரணம் என்னும் வேதத்தின் போதனை பாவத்திலிருந்து மீண்டு வெளிவருவதற்கான ஒரு தேவையை முன்வைக்கிறது. இது கர்த்தருக்கு பிரியமில்லாதது என்று எண்ணி ஒருவன் அந்த பாவத்திலிருந்தும் குற்றமனசாட்சியிலிருந்தும் விடுபட நினைப்பான்;

அந்த பாவம் மன்னிக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து தேவனை சார்ந்துகொள்ளுவான். ஆனால் நாளை செய்யப்போகிற பாவத்திற்கும் சேர்த்து இயேசு நேற்றே சிலுவையில் விலைக்கிரயம் செலுத்திவிட்டார் என்று போதிக்கும் கிருபை உபதேசம், பாவத்திலிருந்து ஒருவர் வெளியேறவேண்டிய தேவையை வலியுறுத்த தவறுகிறது. மாறாக, பாவம் செய்கிறவர்களை ஊக்குவிக்கும் விதமாய் அமைகிறது. இவர்கள் பாவம் செய்யுங்கள் என்று வெளிப்படையாய் போதிப்பதில்லை; ஆனால், அதை செய்யாமல் தடுக்கும் ஆரோக்கியமான போதனையை சொல்ல தவறுகிறார்கள்.

கிருபை உபதேசம் போதிக்கும் திருச்சபைகளை பெயரை வைத்து அடையாளம் காண்பது அரிது. அதின் போதனைகளை வைத்தே அடையாளம் காண முடியும். இன்னதை போதிப்பதினால் மட்டும் அவர்கள் கிருபை உபதேசிகள் அல்ல; சிலவற்றை போதிக்க தவறுவதாலும் அவர்கள் கிருபை உபதேசிகளாகிறார்கள். அவற்றில் இரண்டு முக்கிய குணாதிசயங்களை வெளிப்படையாய் அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.

**1.பாவத்தை குறித்த கண்டிப்பான போதனை இருக்காது.** இத்திருச்சபைகள் பாவத்தைக் குறித்து அதிகம் போதிப்பதில்லை. மக்களை ஊக்கப்படுத்தும் நேர்மறையான ஊக்க செய்திகளை மாத்திரமே போதிப்பர். பாவத்தை கண்டித்து உணர்த்தினால், அது ஜனங்களைக் காயப்படுத்திவிடும் என்று அஞ்சி, மக்களை பிரியப்படுத்தி, ஈர்க்கும் நோக்கத்தோடே போதனைகளை செய்வர். வெளிப்படையாய் பாவ வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு சபை பொறுப்புகளை தயங்காமல் கொடுப்பர். விசுவாசிகளுடைய வாழ்க்கையில் இருக்கும் பாவ கிரியைகளை தவறு என்று வெளிப்படையாய் சுட்டிக்காண்பிக்க தயங்குவர். அவ்வாறு செய்யும்போது, திருச்சபை பாவத்தோடு ஒப்புரவாகும் அபாயம் ஏற்படுகிறது.

**2.பழைய ஏற்பாட்டை முற்றிலும் தவிர்ப்பர்.** கிருபை உபதேசிகள் பழைய ஏற்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். அது நியாயப்பிரமாண காலகட்டம் என்றும், நாம் வாழுவது கிருபையின் காலகட்டம் என்றும் அடையாளப்படுத்தி, நியாயப்பிரமாணத்தை மையமாக்கும் பழைய ஏற்பாட்டினை பெரும்பாலும் பிரசங்கிக்க விரும்புவதில்லை. வாக்குத்தத்த செய்திகளுக்கும், தசமபாகம், ஓய்வுநாள் ஆசரிப்பு போன்ற குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டும் பழைய ஏற்பாட்டை சார்ந்திருப்பர். அது முற்றிலும் தவறானது. வேதத்தை பாரபட்சத்துடன் அணுகாமல், ஒரே மெய்யான தேவனுடைய வெளிப்பாடாய் அணுகுவதே சிறந்தது.

இந்த கிருபை போதனையால் பாதிக்கப்பட்ட திருச்சபைகள் பல்வேறு அபாயகரமான விளைவுகளை சந்திக்க நேரிடும். அவை,

1. **பாவத்தோடு ஒப்புரவாகுதல்:** இத்திருச்சபையின் விசுவாசிகள், பாவத்தோடு ஒப்புரவாகும் வாழ்க்கை முறையை தெரிந்துகொள்வர். தங்கள் பாவத்தை நியாயப்படுத்தும் விவாதங்களில் ஈடுபடுவர்.
2. **தவறான வியாக்கியானம்:** கிருபையை மட்டுமே முன்னிறுத்தி, அனைத்து போதனைகளும் செய்யப்படுவதால், இத்திருச்சபைகளில் வேதம் பாரபட்சத்துடனே வியாக்கியானம் செய்யப்படும். அது வேத வியாக்கியான கொள்கைக்கு புறம்பானது.
3. **ஐக்கியம் தடைபடும்:** திருச்சபைக்கும் தேவனுக்குமான ஐக்கியம் முற்றிலும் தடைபடும்.

இந்த போதனையின் ஆதரவாளர்களும் மற்ற கள்ளப் போதனையாளர்கள் செய்வது போல, வேதத்தில் தங்கள் போதனைக்கு சாதகமாய் கருதுகிற ஒரு சில

வசனங்களை மட்டும் எடுத்து கையாளுகின்றனர். வேதம் சீராய் தொடர்புகொள்ளாத ஒரு உபதேசத்தை வேதாகம உபதேசமாய் ஏற்பது முறையல்ல.

பவுல் அப்போஸ்தலர் இந்த கிருபை போதனையின் அபாயத்தை ஏற்கனவே அறிந்தவராய் ரோமர் 6:1-ல், அதைக் கண்டிக்கிறார். ''ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே". கிருபையை ஒருவர் தவறாய் எடுத்துக்கொள்ளும் அபாயம் இருக்கிறது என்பதை பவுல் முன்கூட்டியே கணிக்கிறார். எனவே அதனை வன்மையாய் கண்டிக்கிறார். "கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவான் 1:17) என்று வேதம் சொல்லுகிறது. கிருபையானது நமக்கு மன்னிப்பையும் மீட்பையும் அருளும்போது, சத்தியமானது அவருடைய கற்பனைக்கு கீழ்படிய நமக்கு போதிக்கிறது. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்தும் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் பாவத்தை அடையாளம் காண்பித்து, அதிலிருந்து நாம் விடுபட நமக்கு உதவிசெய்கிறார். கிருபையும் சத்தியமும் இணைந்து பயணிக்கவேண்டும்.

''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1 யோவான் 4:1) என்று வேதம் உபதேசங்களையும் போதனைகளையும் பகுத்தறிவதற்கு நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது. அதை ஞானமாய் பகுத்தறிந்து செயல்படும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தை தேவனுடைய சித்தத்தின் பாதையில் நேர்த்தியாய் நடத்த முடியும். தேவனுடைய சித்தத்திற்கேதுவான வாழ்க்கையை தெரிந்துகொண்டு, நம்முடைய பேச்சினாலும் நடத்தையினாலும் அவரை மகிமைப்படுத்தும் பரிசுத்த ஜீவியத்தை நாடுவோம். அந்நிய போதனைகளை இனங்கண்டு நம்முடைய சபையை அவற்றிலிருந்து பாதுகாக்க பிரயாசப்படுவோம்.

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 8 (சரியான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | - | கிபியோன் (10:12) |
| 2. | கல் | - | சாட்சி (24:27) |
| 3. | ஏத் | - | பீடம் (22:34) |
| 4. | சந்திரன் | - | ஆயலோன் (10:12) |
| 5. | விருத்தசேதனம் | - | ஆர்லோத் மேடு (5:3) |
| 6. | ஆசரிப்புக்கூடாரம் | - | சீலோ (18:1) |
| 7. | ரொகேல் | - | கிணறு (15:7) |
| 8. | கில்கால் | - | எகிப்தின் நிந்தை (5:9) |
| 9. | பன்னிரண்டு கற்கள் | - | யோர்தான் (4:3,8) |
| 10. | லேசேம் | - | தாண் புத்திரர் (19:47) |
| 11. | இருப்பு ரதங்கள் | - | கானானியர்கள் (17:16) |
| 12. | எண்பத்தைந்து வயது | - | காலேப் (14;10). |
| 13. | நூற்றைப்பத்து வயது | - | யோசுவா (24:29) |
| 14. | குறிசொல்லுகிறவன் | - | பாலாம் (13:22) |
| 15. | எருசலேமின் ராஜா | - | அதோனிசேதேக் (10:1) |
| 16. | பெரிய மனுஷன் | - | அர்பா (14:15) |
| 17. | கீரியாத்செப்பேர் | - | ஒத்னியேல் (15:15-17) |
| 18. | அலங்கத்தின் மதில் | - | ராகாப் (2:15) |
| 19. | பொன்பாளம் | - | ஆகான் (7:21) |
| 20. | ஆறாம் சீட்டு | - | நப்தலி (19:32) |

# நற்செய்தி அறிவிக்கும் வகைகள்
## DIFFERENT APPROACHES OF EVANGELISM

சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமா? நான் எப்படி செய்வது? எனக்கு கூச்ச சுபாவம் ஆயிற்றே. பேச்சாற்றலும் எனக்கு இல்லை; என்று கூறுபவரா நீங்கள்? மத்தேயு 28:19,20 வசனங்களில் ஆண்டவர் இயேசு நமக்கு கூறியிருப்பது வெறும் ஆலோசனை அல்ல. மாறாக அனைத்து விசுவாசிகளுக்கும் அவர் அளித்துள்ள 'பிரதான கட்டளை' ஆகும். ஆகவே இதை தட்டிக் கழிக்க ஒரு சாக்குபோக்கும் நாம் சொல்லக்கூடாது.



புதிய ஏற்பாட்டில் பல வழிகளில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதை பற்றி நாம் வாசிக்கிறோம். ஒவ்வொரு தனி நபருக்கும் நற்செய்தி அறிவிக்க தேவன் அருளியுள்ள வரங்களும், திறமைகளும் உண்டு. ஒவ்வொரு சபையிலும் இந்த விதமான நற்செய்தி அறிவிக்கும் தாலந்துகளை உடையவர்கள் இருப்பார்கள். அவைகள் கீழ்க்காணும் இந்த 6 வகைகளுள் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் அடங்கும்.

சபையின் அங்கத்தினர்கள் தங்கள் வரங்களையும், திறமைகளையும் ஒருங்கிணைத்து ஒருமனதுடன் செயல்பட்டால் சமுதாயத்தில் சிறப்பான விதத்தில் நற்செய்தி பணியாற்ற முடியும்.

நற்செய்தி அறிவிக்கும் 6 வகைகளை அல்லது அணுகுமுறைகளை குறித்து நாம் அறிந்து கொள்வோமா? இதில் உங்களுக்கு உகந்தது எதுவென தெரிவு செய்யுங்கள்.

### 1.நேரடியாக அறிவித்தல் (DIRECT APPROACH)

இந்த முறையில்தான் பேதுரு பெந்தெகொஸ்தே நாளன்று பெரும்திரளான மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பதை நாம் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம் (2:14-40). அவர் நேரடியாக ஆண்டவர் இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு மற்றும் அவர் அருளும் இரட்சிப்பு ஆகியவற்றை அறிவிக்கிறார். இவ்விதமாக அறிவிக்கும் வரம் பெற்றவர்கள் உடனடியாக கிறிஸ்துவே உலக இரட்சகர் என்றும், அவர் நித்திய ஜீவனை அருளுகிறவர் என்றும் தைரியமாக அறிவிப்பார்கள். அது மட்டுமின்றி நற்செய்தி கேட்பவரின் பதிலையும் எதிர்கொள்ள ஆயத்தமாய் இருப்பார்கள். இவர்களின் அணுகுமுறை கிறிஸ்துவின் மீதான நோக்கம், விசுவாசம் அவசியம் என்று வலியுறுத்துவதாகவும், கேட்பவரின் கவனத்தை கிறிஸ்துவை நோக்கியே திருப்புவதாகவும் இருக்கும்.

### 2. அறிவு பூர்வமாக அறிவித்தல் (INTELLECTUAL / APOLOGETIC APPROACH)

இந்த வகையை கையாளுவதில் சிறந்த உதாரணமாக அப்போஸ்தலர் பவுல் விளங்குகிறார். அத்தேனே பட்டணத்து தத்துவ ஞானிகளுக்கும், சீரிய சிந்தனையாளர்களுக்கும் பவுல் அறிவு பூர்வமாக, காரண காரியங்களுடன் கிறிஸ்துவின் நற்செய்தியை விளக்கி கூறுவதை நாம் அப்போஸ்தலர் 17:16-34 வசனங்களில் வாசிக்க முடியும். நற்செய்தியின் நம்பகத்தன்மையை, மேன்மையை நிரூபணங்களுடன் பவுல் தெளிவாக எடுத்துரைப்பதை நாம் காண்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், ஆழமான வேத அறிவும், பிறமத வழிபாட்டு முறைகளை பற்றிய தெளிவான புரிதலும், சாந்தமாகவும், கோர்வையாகவும், பேசும் திறமையும் பெற்றவர்கள் மட்டுமே இம்முறையை கையாண்டு நற்செய்தி அறிவிக்க முடியும்.

**3. சாட்சிகள் வாயிலாக அறிவித்தல் (TESTIMONIAL APPROACH)**

இவ்வகையை பற்றி எளிமையாக விளக்கினால் இது "கதை சொல்லுதல்" (STORY-TELLING). கட்டுகதையல்ல. இயேசு நம் வாழ்வில் இடைபட்டு நம் வாழ்வை எப்படி மாற்றினார்; என்னென்ன அற்புதங்கள் செய்தார் என்ற உண்மை நிகழ்வை நாம் பிறருக்கு கூறுவதாகும். உதாரணமாக யோவான் 9ம் அதிகாரத்தில் பிறந்தது முதல் பார்வையற்றவராய் இருந்த மனிதன் இயேசுவால் அற்புதமாக பார்வை பெற்று கொள்கிறான். அவன் எப்படி பார்வை பெற்றான் என்று மற்றவர் அவனிடம் விசாரிக்கும் போது, "நான் குருடனாய் இருந்தேன்: இப்போது காண்கிறேன்" என்று இயேசு தனக்கு செய்த அற்புதத்தை விவரிக்கிறான் (யோவான் 9:25). இதே போன்று இயேசுவால் நாம் பெற்ற விடுதலையை, சுகத்தை, சமாதானத்தை, நன்மையை நாம் விசுவாசத்துடன் பிறரிடம் விவரிக்கும்போது அந்த மெய்சாட்சி அவர்களை தொடும். ஆண்டவர் இயேசுவை விசுவாசிக்கும்படி அவர்கள் உள்ளத்தை தூண்டும்.

**4. உறவின் வாயிலாக அறிவித்தல் (RELATIONAL APPROACH)**

இது நம் உறவினருக்கும், நாம் அன்புடன் பழகும் நண்பர்கள், அயல் வீட்டார் போன்றோருக்கும் நற்செய்தியை அறிவிப்பதாகும். இத்தகைய வரம் பெற்றோர் சக மனிதர்களை நேசிப்பவர்களாகவும், இனிமையாக பழகும் சுபாவம் உடையவர்களாகவும் காணப்படுவார். ஆண்டவராகிய இயேசு 'லேவி' (மத்தேயு) என்ற மனிதரை ஆயத்துறையில் கண்டு அழைத்தவுடன், அவர் எழுந்து இயேசுவின் பின் சென்றார். பின்பு அவர் தனது வீட்டில் இயேசுவுக்கு விருந்து ஏற்பாடு செய்து தந்து நண்பர்கள், அறிமுகமானவர் அனைவரையும் அந்த விருந்துக்கு அழைத்து இயேசுவை அவர்களும் அறிந்து கொள்ளும்படி செய்கிறார் என்று லூக்கா 5ம் அதிகாரத்தில் பார்க்கிறோம் (லூக்கா 5:27-29). இவ்வாறே நாமும் கூட நம் நண்பர்கள், உறவினருடன் உண்மையான அன்பு, அக்கறையுடன் நல்லுறவு கொண்டிருந்தால், ஏற்ற வேளையில் அவர்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்க முடியும்.

**5. அழைப்பின் மூலமாக அறிவித்தல் (INVITATIONAL APPROACH)**

இது நம் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், உடன் வேலைசெய்வோர், அண்டை அயல் வீட்டாரை நம்முடன் ஆலயத்திற்கு வரும்படி வாஞ்சையுடன் அழைப்பதாகும். தனியாக வருவதை விட ஒரு அறிமுகமான நபருடன் கூட ஆலயத்திற்கு வருவதை எவரும் விரும்புவர். ஒரு வேத பாட வகுப்பிற்கோ, சிறப்பு ஜெபக்கூட்டம், சிறப்பு நற்செய்தி கூட்டம், விழாக்கால சிறப்பு நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு நம்முடன் கூட வரும்படி அழைப்பு விடுக்கலாம். நம்மால் அறிவிக்கப்படும் இடங்களுக்கு நமக்கு அறிமுகமானவர்களை அழைத்து சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை அவர்கள் கேட்க வழிவகை செய்வதே இதன் நோக்கமாகும். புதிய விசுவாசியால் கூட இதை செய்ய முடியும் என்பதே இவ்வகையின் சிறப்பாகும். எடுத்துக்காட்டாக இயேசுவுக்கு அறிமுகமான பிலிப்பு மறுநிமிடமே நாத்தான்வேலிடம், 'வந்து பார்' என்று அழைத்தார் (யோவான் 1:46).

**5. சேவையின் மூலமாக அறிவித்தல் (SERVICE / LIFE-BASED APPRAOCH)**

இயல்பாகவே பிறருக்கு உதவும் 'குணம்' உடையவருக்கு இவ்வகை நற்செய்தி அறிவித்தல் ஏற்றதாகும். நற்செய்தி அறிவிக்க வார்த்தை எவ்வளவு முக்கியமோ, செயலும் அவ்வளவு முக்கியமாகும். நாம் கிறிஸ்துவை அறியாதோர் நடுவிலே மிகவும் நல்நடக்கையுடன் வாழ வேண்டும். நம் வார்த்தையும், செயலும் ஒன்றாக இல்லையெனில் நாம் பகிரும் நற்செய்தியால் பலன் இருக்காது. இதைத்தான் பேதுரு தனது நிருபத்தில் வலியுறுத்துகிறார் (1பேதுரு 2:12). நாம் போதிக்கும் இயேசுவின் அன்பை, இரக்கத்தை, நமது உதவிகரமான செயல்கள் மூலமாக வெளிப்படுத்தும்போது, இயேசுவின் நற்செய்திக்கு, நற்சாட்சிகளாய் விளங்குவோம்.

நீங்கள் அறிந்து கொண்ட இந்த நற்செய்தி அறிவிக்கும் முறைகளில் உங்களுக்கு உகந்ததை, ஜெபத்துடன் தெரிவுசெய்து, பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன், இன்றிலிருந்து செயல்படுத்த உங்களை உற்சாகப்படுத்துகிறேன். கர்த்தர் உங்களை இவ்வருட ஆத்தும ஆதாய வீரராக / வீராங்கனையாக மாற்றுவாராக!.

– ஆசிரியர்



தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# நல்லவன் - தயை பெறுவான்

**Rev. Y. சோர்பன்**

(Hebron City AG Church, Coimbatore)

பொருளாளர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்.

**நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான் (நீதிமொழிகள் 12:2).**

தமிழ்பிரதேச ஆண்கள் ஐக்கியத்தின் சார்பில் உங்கள் அனைவருக்கும் புதுவருட அன்பின் வாழ்த்துக்கள்.

இன்று நாம் வாழும் இந்த உலகில் மனிதர்கள் செய்கிற சில காரியங்களைப் பார்த்து அவர்கள் நல்லவர்கள் அல்லது பொல்லாதவர்கள் என்று நியாயம் தீர்த்துவிடுகிறோம். நம்முடைய பார்வையில் அவர்கள் நல்லவர்களாகத் தெரியவில்லையென்றால் அவர்கள் பொல்லாதவர்கள் என்று மற்றவர்களிடம் சொல்லிவிடுகிறோம். அப்படி நாம் சொல்லும்போது அநேக நேரங்களில் அது தவறாக அமைந்துவிடுகிறது. காரணம் நாம் அவர்களின் வெளித்தோற்றத்தை வைத்தே அதை நிர்ணயம் பண்ணிக்கொள்ளுகிறோம்.

**மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்: மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1சாமு. 16:7)**

இருதயத்தைப் பார்க்கிற தேவனால் மட்டுமே உண்மையில் யார் நல்லவன் என்பதை சொல்லமுடியும். அப்படி தேவன் நம்மை பார்க்கும்போது ஒவ்வொரு தேவபிள்ளைகளும் நல்லவர்களாக காணப்படவும், தேவனிடத்திலிருந்து அதிகமான தயையும் பெற்றுக்கொள்ளுகிறவர்களாக காணப்படவும், இந்த புதிய ஆண்டிலே தேவன் நமக்கு உதவிச் செய்வாராக. நீதிமொழிகள் 12:2 நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான். ஆமென்.

பரிசுத்த வேதாகமத்தில் ஒருவனை குறித்து நல்லவன் என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த தேவமனிதனிடத்திலிருந்து நல்லவனுக்குரிய சில அடையாளங்களை நாம் தியானிக்கப்போகிறோம்.

## I.நல்லவனின் அடையாளங்கள்:

அவன் (பர்னபா) போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்தி சொன்னான். அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்: அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய் சேர்க்கப்பட்டார்கள் (அப்.11:23,24).

மேலே சொல்லப்பட்ட வேதவசனத்திலிருந்து பர்னபா நல்லவன் என்பதை நம்மால் அறியமுடிகிறது. இவனிடத்திலிருந்து நம்மால் நல்லவனுக்குரிய சில அடையாளங்களை கற்றுக்கொள்ள முடியும்.

### 1.தேவனுடைய கிருபையை கண்டபோது சந்தோஷப்பட்டான் (அப். 11:23)

எருசலேமிலிருந்த சபையார் பர்னபாவை அந்தியோகியாவிற்கு அனுப்புகிறார்கள். காரணம் ஸ்தேவான் நிமித்தம் எழும்பின உபத்திரவத்தினிமித்தம் சீப்புருதீவாரும், சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியாவிற்கு வந்து கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக்குறித்து பிரசங்கித்தார்கள்.

இதன் விளைவாக அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். அங்கு போய் பர்னபா இதைக் கண்டபோது சந்தோஷப்பட்டான். இதைத்தான் தேவனுடைய கிருபையைக்கண்டபோது சந்தோஷப்பட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆம், ஜனங்கள் இரட்சிக்கப்படுகிறதையும், ஆத்துமாக்கள் சபையில் சேர்க்கப்படுகிறதையும், சபை வளருகிறதையும் நல்லவர்கள் பார்த்து சந்தோஷப்படுவார்கள். இப்படிப்பட்ட தேவனுடைய கிருபையை நம் சபைகளில் பார்க்க இந்த புதிய ஆண்டிலே தேவன் நமக்கு உதவிசெய்வாராக. பொறாமைகள், எரிச்சல்கள் நமக்கு வேண்டாமே!.

### 2.கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கும்படி புத்தி சொன்னான் (அப்.11:23)

விசுவாசிகளாகி மனம்திரும்பினவர்கள் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கும்படி பர்னபா எல்லாருக்கும் புத்தி சொன்னான். இது ஒரு நல்ல தேவபிள்ளையின் அடையாளம். இன்று நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் இப்படிப்பட்ட தேவபிள்ளைகளையே எதிர்ப்பார்க்கிறார். நாம் இருக்கிற சபையில் வருகிறதான மற்றவர்கள் கிறிஸ்துவிலும், சபையிலும், ஐக்கியத்திலும் நிலைத்திருக்க தேவையான நல்ல ஆலோசனைகளை கொடுக்கிறவர்களாக கர்த்தர் நம்மை மாற்றுவாராக. மற்றவர்கள் கிறிஸ்துவின் அன்பையும், சபையையும் விட்டு விலகுவதற்கேதுவான எந்தவொரு செயலையும் நாம் செய்யாமலிருக்க நம்மை இந்த புதிய ஆண்டிலே ஒப்புக்கொடுப்போம்.

### 3.சவுலை அந்தியோகியாவிற்கு அழைத்துக் கொண்டு வந்தான் (அப்.11:25)

அந்தியோகியாவில் சபை வளர்ந்து வந்த அந்த நாட்களில் சவுல் (பவுல்) தர்சு பட்டணத்தில் இருந்தான். உடனே பர்னபா சவுலைத் தேடிப்போய் தர்சு பட்டணத்திலிருந்து அந்தியோகியாவிற்கு அழைத்துக்கொண்டு வந்தான். அந்தியோகியா சபையையும், ஐக்கியத்தையும் குறிக்கிறது. ஆம் ஒரு நல்லவனின், ஒரு நல்ல தேவபிள்ளையின் அடையாளம் என்பது இன்னும் சபைக்குள்ளும், ஐக்கியத்திற்குள்ளும் வராமலிருக்கிறதான ஒவ்வொருத்தரையும் சபைக்குள்ளும், ஐக்கியத்திற்குள்ளும் கொண்டுவருவதற்கான முயற்சிகளை ஜெபத்தோடும் அதிகமான பாரத்தோடும் மேற்கொள்ளுவதேயாகும். இந்த புதிய ஆண்டிலே இப்படிப்பட்ட முயற்சிகளை நாம் மேற்கொள்ள ஒப்புக்கொடுப்போம். பர்னபா சவுலை சீஷர்களோடும் (அப்.9:2), அந்தியோகிய சபையோடும் (அப்.11:25) இணைத்து வைத்ததினால் சவுலும் ஆசீர்வதிக்கப்பட்டான், பர்னபாவும் ஆசீர்வதிக்கப்பட்டான்.

### 4.ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினான் (அப். 11:26)

இப்பொழுது பர்னபாவும், சவுலும் இருவரும் சேர்ந்து ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். ஒரு நல்ல தேவபிள்ளையின் அடையாளங்களில் இதுவும் ஒன்று. பிசாசின் உபதேசங்கள் (1தீமோ.4:1), விகற்பமான உபதேசங்கள் (தீத்து 2:8) மற்றும் கள்ள உபதேசங்களும் தாராளமாக பெருகிவரும் இந்த நாட்களில் நாம் ஜாக்கிரதையாக இருப்பது மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கு ஆரோக்கியமான, தேவபக்திக்கேற்ற, கிறிஸ்துவைப்பற்றிய மூல உபதேசவசனங்களை போதிக்கிறவர்களாகவும் மாற தேவன் நமக்கு உதவிச் செய்வாராக. **"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்''** (கொலோ.1:28).

## II. நல்லவனின் செயலால் என்ன நடந்தது

### 1.இன்னும் அநேகர் கர்த்தரிடம் சேர்க்கப்பட்டார்கள் (அப். 11:24)

பர்னபா ஒரு நல்ல தேவமனிதனாக நல்லவனாக இருந்ததினால், செயல்பட்டதினால் இன்னும் அநேகர் கர்த்தரிடம் சேர்க்கப்பட்டார்கள். தேவபிள்ளைகளாகிய நம்முடைய கிரியைகளின் வாயிலாக ஒரு மிகப்பெரிய வளர்ச்சியை இந்த ஆண்டிலே தேவன் நம்முடைய சபைகளுக்கு தருவார். அதுபோல உங்கள் குடும்பங்களிலும் நீங்கள் எதிர்பார்க்கிற ஆசீர்வாதங்களை சேர்த்து தருவார் ஆமென்.

### 2.ஒரு புதிய நாமம் கிடைக்கப்பட்டது (அப். 11:26)

பர்னபா ஒரு நல்ல தேவமனிதனாக நல்லவனாக இருந்ததினால், செயல்பட்டதினால் அன்று ஒரு புதிய பெயர். அதாவது கிறிஸ்தவர்கள் என்ற பெயர் தரிக்கப்பட்டது. ஆம் தேவபிள்ளையே நாம் தேவனுடைய பார்வையில் நல்லவர்களாக இருந்தால் இந்த புதிய ஆண்டிலே புதிய நாமம் உனக்கும் தரிப்பிக்கபடும். **“இனி நீ கைவிடப்பட்டவள் (ன்) என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்”** (ஏசாயா 62:4).

### 3. நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான்

ஒரு நல்ல பர்னபாவிற்கு தேவனுடைய தயவு வெளிப்பட்டதை நம்மால் அறியமுடிகிறது. சங். 89:17 சொல்லுகிறது **உம்முடைய தயவினால் எங்கள் கொம்பு உயரும்**. கர்த்தர் பர்னபாவை வல்லமையாக எடுத்து பயன்படுத்தினார், ஆசீர்வதித்தார், உயர்த்தினார்.

இந்த 2025 ஆம் ஆண்டு தேவன் எதிர்பார்க்கும் நல்லவர்களாக வாழ்ந்து தேவனுடைய தயையை நாம் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொடுப்போம். அந்த கிருபையை கர்த்தர் நம் ஒவ்வொருத்தருக்கும் தருவாராக. ஆமென்.

**நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான் (நீதிமொழிகள் 12:2).**

## பரிசுத்த வேதாகமம்

உலகத்திலேயே அதிகமான பேர் வாசிக்கும் புத்தகம் பரிசுத்த வேதாகமம்!

உலகிலேயே அதிகமாக விற்பனை செய்யப்படுகிற புத்தகமும் வேதாகமமே!

மேலும் உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமம்! இந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

கடந்த 2023 செப்டம்பர் மாத கணக்கின்படி முழு வேதாகமமும் 736 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாடு மட்டும் மேலும் 1658 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இது தவிர வேதாகம பகுதிகள் சுமார் 1264 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



இப்படி சுமார் 3658 மொழிகளில் வேதாகமத்தின் ஏதோ ஒரு பகுதியில் இன்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதினிமித்தம் உலகிலுள்ள சுமார் 650 கோடி பேர் வேதாகமத்தை தங்கள் சொந்த மொழிகளில் வாசிக்க முடியும்.

தொடர்ந்து வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியர்களுக்காக ஜெபிப்போம்!

இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் சொந்த மொழிகளில் வேதத்தைப் படிக்கத்தக்க கர்த்தர் அருள் புரிவாராக.



# புதிய வருடத்தில் மிஷன் பணி


**Rev. J. தேவதாசன் கலையரசன்**
வில்லிவாக்கம் மண்டல தலைமைப் போதகர்
உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்


புதிய வருடத்தில் அநேக நல்ல தீர்மானங்கள் எடுப்பது, பொருத்தனை செய்வது போன்ற நல்ல அர்ப்பண செய்கைகளைச் செய்ய வருடந்தோறும் நமது சபைகளில் ஊக்குவிக்கிறோம். கடந்த 2024 ஜனவரியில் எடுத்த புதிய வருட தீர்மானங்கள் உண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டனவா? என்று டிசம்பரில் சுய ஆய்வு செய்கிறோம். இப்படி ஏதும் செய்யாமலேயே பழைய வருடம் கடந்து போனது, புதிய வருடமும் பிறந்து விட்டது என்று காலத்தை ஓட்டும் சில மக்களுமுண்டு.

குறைந்தபட்சம் கடந்த வருடம் எடுத்த தீர்மானங்களில், இலக்குகளில் ஒன்றிரண்டை அடையமுடியாமல் போனாலும் வருடந்தோறும் புதிய தீர்மானங்கள் எடுப்பதும், இலக்குகளை புதுப்பிப்பதும் அவசியமானது தான். அதுவே இறுதி இலக்கை அடையச் செய்யும் வழியாகும்.

அந்த அடிப்படையில் இயேசு கிறிஸ்துவுக்கு மிகப்பிரதானமாக இருந்த **உள்ளூர் சுவிசேஷப் பணியிலும், வெளியூர் மிஷனரிப் பணியிலும்** நாம் எங்கே இருக்கிறோம் என்று ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட **விசுவாசியும்,** வளர விரும்புகின்ற எந்த ஒரு **ஸ்தல சபையும்** சுய ஆய்வு செய்வதும், அதனடிப்படையில் நல்ல தீர்மானங்களை புதிய வருடத்தில் எடுப்பதும் அவசியம்.

## I. இயேசுவுக்கு பிரதானமாக இருந்தது, எனக்கு எப்படி இருந்தது? இருக்கிறது? இருக்கப் போகிறது?

(இது ஒரு நல்ல சுய ஆய்வுக் கேள்வி)

**1. இயேசு கிறிஸ்துவுக்கு,** பிரதானமாயிருந்த பணிகள் என்னென்ன? என்ற கேள்விக்கு முதலாவது பதில் காண்போம்.

1. இழந்து போன மனிதரை மீட்டு பிதாவோடு ஒப்புரவாக்க (லூக்கா 19:10; ரோமர் 5:10-11; 2கொரி. 5:18-19).
2. நித்திய வாழ்வு தர (யோ 3:16; 1யோ 5:13).
3. பிசாசின் கிரியை அழிக்க (1யோ 3:8; எபிரெயர் 2:14-15).
4. மீட்பின் திட்டத்தை தமது பிராயாசித்தத்தினால் நிறைவேற்ற (யோ3:16; ரோமர் 5:8).
5. தேவனுடைய ராஜ்யத்தை மனிதரின் இருதயங்களில் ஸ்தாபிக்க தான் பிதாவினால் அனுப்பப்பட்டார் என்ற காரணத்தை அறிந்து அவரது ஊழியத்தை நிறைவேற்றினார் (மத்தேயு 4:17; மாற்கு 1:15).

**2.** இயேசு கிறிஸ்து தாம் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற அவர் பிரதானமாக செய்தது

1. இழந்து போன மனிதருக்கு **சுவிசேஷத்தை அறிவிப்பதை** அவரது பிரதான பணியாக கொண்டிருந்தார் (மத். 4:1, மாற்கு 1:15).

2. அற்புத அடையாளங்களினாலும் மற்றும் நோய்களை சுகமாக்கியும், பிசாசின் பிடியிலிருந்து ஜனங்களை விடுவிக்கும் அவரது வல்லமை ஊழியங்களின் நோக்கமும் ராஜ்யத்தின் **சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்காகவே** என்று உறுதிப்படுத்தினார் (மத். 9:35; மாற். 1:34; அப்.10:38).

**3.** கேட்கப்பட வேண்டிய முக்கியமான ஆய்வுக் கேள்விகள்.

1. இயேசு கிறிஸ்து ஜெபித்தார், ஜெபிப்பதை முதன்மையான நோக்கமாக கொண்டிருந்தார். எனவே "நானும் ஜெபிக்கிறேன்"
2. அவர் பரிசுத்தர் ஆகவே நானும் பரிசுத்தமாக வாழ முயற்சிக்கிறேன் என்பவர்கள்...
3. அவர், இரவு பகலாக அலைந்து திரிந்து சுவிசேஷத்தைச் சொன்னாரே...
4. அவர், பசி நேரத்தில் உதவியாளரைக் கொண்டல்ல தானே சமாரிய ஸ்திரீக்கு சுவிசேஷம் அறிவித்தாரே (யோ 4:6-32).
5. நள்ளிரவு நேரத்தில் இன்று போய் நாளை வா! என்று சொல்லாமல்...தானே நிக்கொதேமுக்கு சொன்னாரே (யோ 3:2).
6. ஒரு ஊரில் நிறைய வரவேற்பு இருந்தும் அங்கேயே தங்கிடாமல் வேறு இடங்களுக்கு சென்று திரும்பவும் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் அலைந்து திரிந்து சுவிசேஷத்தை அறிவித்தாரே, அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்த நற்செய்தி ஊழியத்தில் நான் எங்கிருக்கிறேன்? நான் எவ்விதம் முக்கியத்துவம் கொடுக்கிறேன்?
7. அவரது முதல் கட்டளை மனிதரை பிடிப்பது தானே (மத்தேயு 4:19)
8. அவரது இறுதிக் கட்டளை மனிதரை பிடிப்பது தானே (மத்தேயு 28:19-20)

- எனக்கும் சுவிசேஷ ஊழியத்திற்கும் உள்ள பந்தம் என்ன?
- எனது சபை நற்செய்தி ஊழியத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவம் என்ன?
- ஒரு விசுவாசி; இக்கட்டுரையை வாசிப்பின், **நான் இந்த வருடத்தில் (2024) கடைசியாக யாருக்கு நற்செய்தி அறிவித்தேன்?** எத்தனைமுறை? எத்தனை பேருக்கு? அறிவித்திருக்கிறேன். யாராகிலும் ஒருவருக்காவது நான் சுவிசேஷம் அறிவித்து சபைக்கு வழி நடத்தியிருக்கிறேனா?
- சபை போதகரென்றால்?

1. நற்செய்தி ஊழியத்தை ஏன் செய்ய வேண்டும்? அதன் முக்கியத்துவம் என்னவென்று என் சபைக்கு நான் கடைசியாக (2024) எப்போது பிரசங்கம் செய்துள்ளேன்?
2. கடைசியாக எனது சபையில் என்று ஞானஸ்நான ஆராதனை நடந்தது (2024) எத்தனைபேர் ஞானஸ்நானம் எடுத்திருக்கிறார்கள்?

இச்சுய ஆய்வை **விசுவாசி** என்ற நிலையிலும், **சபைப் போதகர்** என்ற நிலையிலும் செய்தால் புதிய வருடத்திற்கான வழிக்காட்டுதலைப் பெறலாம்.

## II.உங்கள் மிஷன் ஊழிய ஆர்வம் உள்ளூர் நற்செய்தி ஊழியத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

உள்ளூரிலிருந்து உலகத்தின் கடைமுனை மட்டும் (அப்.1:8)

**1.** இயேசு கிறிஸ்து தம் சீஷர்களுக்கு எடுத்தவுடனேயே 'உலகமெங்கும்' என்று கட்டளை கொடுக்கவில்லை. மாறாக உள்ளூரில் சுவிசேஷம் அறிவிக்க முதலாவது கட்டளையிட்டார்.

- அறிந்தவர்களிடம் ஆரம்பித்து அறியாதவர் வரை சொல்லும் சுவிசேஷ யுக்தி அது.
- பழகிய கலாச்சாரத்தில் நற்செய்தி அறிவிக்கப் பழகி அறியாத கலாச்சாரம் வரை சொல்லும் யுக்தி அது.

**2.** எடுத்த உடனேயே, உணர்ச்சிப் பூர்வமாக தீர்மானம் எடுக்க வைத்து, மாற்று கலாச்சாரம் ஊழியம் செய்ய வைக்கும் தற்காலத்து முயற்சி நல்ல விளைவுகளை ஏற்படுத்தவில்லை.

**3.** இயேசு கிறிஸ்துவின் சிறந்த முறை

1. முதலில் நற்செய்தி அறிவிக்க வேண்டியது எருசலேமில் தான் (மத்தேயு 15:24)

- இவ்விதம் யூதர்கள் மத்தியில் இருந்து வந்த 'எருசலேம் நம்பிக்கையை' கனப்படுத்தினார் (லூக்கா 24:21, அப்.1:6).

2. அந்நாட்களில் உலகத்தின் மையமாக எருசலேம் திகழ்ந்ததால் துவக்க ஊழிய ஸ்தலமாக எருசலேமை பயன்படுத்தினார் (Strategic Approach)

3. அதே சமயம் குறுகிய வட்டார சிந்தையுடன் இப்படிச் செய்தார் என்று சொல்ல இயலாது. ஏனென்றால் உயிர்த்தெழுந்த பின் **எருசலேம் – யூதா – சமாரியா – உலகம்** சென்று சுவிசேஷம் அறிவிக்க கட்டளை கொடுக்கிறார் (அப்.1:8, மத்தேயு 28:19-20).

## III. எருசலேமில் பயன்பட்டவர்களே... அகில உலக சுவிசேஷ ஊழிய சரித்திரத்தில் இடம் பெற்றார்கள்

**1.** தென் இந்தியாவில் உள்ள சில மிஷன் இயக்கங்கள் உண்டான விதம் இது தான். தங்கள் ஊரில் சுவிசேஷம் அறிவிக்க பாரம் கொண்டவர்கள், முயன்றவர்கள் பின் முழு இந்தியாவிற்கும் நற்செய்தி வெளிச்சம் போக வேண்டும் என ஜெபிக்க ஆரம்பித்தார்கள் அதன் பலனாகவே மிஷன் உலகத்தில் சரித்திரம் படைத்தார்கள்.

**2.** எருசலேம் சபையில் உருவானவர்களே, எருசலேமிலும் பின்பு உலகமெங்கும் சென்றார்கள் (மாற்கு16:20, அப். 8:4).

**3.** நல்ல தீர்மானத்திற்கான சில உதாரணங்கள்.

1. இந்தியா மற்றும் உலக வரைபடம் மற்றும் குறிப்புகளை வைத்து ஜெபிக்க தீர்மானிக்கலாம் (அப்படி உருவானவர் தான் வில்லியம் கேரி).

2. தனது சபையில் Sunday Class எடுத்தவர் தான் பின்னாளில் உலகமெங்கும் பயன்படுத்தப்பட்ட டி.எல்.மூடி இன்று உங்கள் சபையில் ஏதாகிலும் ஒரு ஊழியம் செய்வது என்கின்ற புதிய வருட தீர்மானம் உங்களையும் உலக நற்செய்தி ஊழியத்திலும் உங்களை இணைக்கும்.

3. எந்த ஒரு சபை மாதந்தோறும் மிஷன் ஊழியத்திற்கு என்று கொடுக்கப் பழகுகிறதோ அந்த சபை பின்னாட்களில் மிஷனரிகளை அனுப்பும் அளவு உயரும்.

## இறுதியாக:

இப்புதிய வருடம் உள்ளூர் நற்செய்தி ஊழியத்திலும் உலக நற்செய்தி ஊழியத்திலும் உங்களின் பங்கு முக்கியமானதாக இருக்கட்டும்.

# the HEALTHY church

*Then the churches throughout all Judea, Galilee, and Samaria had peace and were edified. And walking in the fear of the Lord and in the comfort of the Holy Spirit, they were multiplied (Acts 9:31).*

Throughout history, Christians have looked to the church in the Book of Acts as a model of what Christ wants in His body. Our verse in Acts 9:31 sets forth 5 evidences of a healthy church.

**1. CLIMATE OF PEACE**

Notice that the verse begins with the word 'then'. The context of this verse is the conversion of Saul and the resulting decrease of external persecution on the church. However, peace involves much more than the absence of persecution. A church can have peace outwardly and not inwardly. Peace involves absence of conflict, both outwardly and inwardly, and the presence of harmony. A church filled with division will not see multiplication. The climate of peace naturally produces an atmosphere of unity. Are you helping to unify your congregation, or do you create divisions?

**2. CONSISTENT SPIRITUAL GROWTH**

Notice the verse says, ''and were edified.'' Edify here literally means ''to build a house,'' referring to us, the household of God! It's a reference to spiritual growth. A healthy church is one blossoming with spiritual growth in its members. We grow spiritually through spiritual food and spiritual exercise. Our spiritual food is the regular intake of God's Word, and our spiritual exercise is our ministry and service. If you are going to grow spiritually, it will cost you time and effort (see Col. 2:6, 7).

**3. COMPELLING SPIRITUAL VITALITY**

Acts 9:31 tells us the New Testament church was ''walking . . . in the comfort of the Holy Spirit.'' This church was alive! A clear spiritual dynamic was at work! Distinct characteristics identify a dynamic church. The church must live by faith (Heb. 11:6; 2 Cor. 5:7). The church must commit to holiness (Eph. 4:30). The church must depend on prayer (Eph.6:18). Without these components, our church would be dead! Are we making progress in these areas?

**4. CONSISTENT NUMERICAL GROWTH.**

The New Testament church was multiplied. A healthy church will

experience consistent numerical growth. Not numbers for numbers' sake, but because numbers represent people and people matter to God! We need to reach people for Christ! A healthy church is a church where lives are changed by the gospel, a church that sees consistent numerical growth. Now there are settings where a church is reaching people and not growing numerically. In areas of rapidly declining population, a church may reach many for Christ and not see a numerical increase. For most churches, however, this is simply not the case.

**5. CONSUMING GOD FOCUS.**

A key phrase in our verse is ''walking in the fear of the Lord.'' Walking involves a way of life. The fear of the Lord portrays an idea of being afraid to offend God in any way. A healthy church seeks God's will above all else. A church that pleases God is a church where the people honour Christ in their daily conduct, in their thoughts (Phil. 4:8), deeds (2 Cor. 7:1), and words (Eph.4:29).

In the face of all the problems in the church, we can become part of the solution. We need to follow the model of the New Testament church, cultivating the lifestyle of peace, spiritual growth and vitality, numerical growth, and godliness. Will you commit yourself to help build that type of church? It has been said there are three kinds of people: those who make it happen, those who watch it happen, and those who wonder what happened. Will you commit to be a part of that first group, those who make it happen?


தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட்

வழங்கும்




பாருங்கள் ! பயனடையுங்கள் !!

தொலைக்காட்சியில்

வியாழக்கிழமை தோறும் காலை : 7.30 மணி முதல் 8.00 மணி வரை

Contact : Rev. I. Christdhas, Director, Department of Evangelism & Church Planting

Hope A.G. Church, No.1, Dr. Radhakrishnan St., Pallikaranai, Chennai - 100. Cell: 98412 98009

# நேர்த்தியான பங்கு



Rev. **Steve Asir**
(President - Christ's Ambassadors)

அன்பான கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புது வருட வாழ்த்துக்கள்!

கடந்த ஆண்டு முழுவதும் நம்மை நேர்த்தியாய் நடத்தி வந்த ஆண்டவருக்கு மகிமை உண்டாவதாக. இந்தப் புதிய ஆண்டிற்கும் தேவையான கிருபைகளையும் பெலனையும் தேவன் நிறைவாய்த் தந்து உங்களை ஆசீர்வதிப்பாராக. இவ்வாண்டு நாம் நேர்த்தியான இடத்தில் பங்குள்ளவர்களாய் வாழத் தேவன் கிருபை தருவாராக.

> *சங்கீதம் 16:6–ன் படி "நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு".*

சங்கீதக்காரனின் இவ்வார்த்தையின்படியே நம் வாழ்விலும் நேர்த்தியான பங்குக்கு சுதந்தரவாளியாய் வாழத் தேவன் கிருபை தருவாராக.

இவ்வுலகத்தில் உள்ள அனைத்துமே மாறக்கூடியதும் மறைந்து போகக் கூடியதுமாய் இருக்கிறது. இவைகளின் நடுவில் தேவன் நமக்கு வைத்திருக்கிற மேலான நேர்த்தியான பங்கை நாம் சுதந்தரித்துக் கொள்ளத் தேவன் கிருபை தருவாராக.

## எது நேர்த்தியான பங்கு?

இவ்வுலகத்தில் நாம் எதைப் பெற்றாலும் அது நிரந்தரமில்லை. அவைகள் அத்தனையும் மாறி அழிந்து போகும். ஆனால் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற அசையாத நித்திய ராஜ்யம் ஒன்று உண்டு. அந்த ராஜ்யத்திற்கு நாம் பங்குள்ளவர்களாய் வாழ்வதே மேன்மை.


> *வெளி 20:6–ன் படி "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்."*

நம்முடைய மரணமோ அல்லது கிறிஸ்துவை சந்திக்கும் நிலையே எது நமக்கு நேரிட்டாலும் நாம் உயிர்த்தெழுவதும் மறுரூபமாவதுமே அந்த நித்திய நேர்த்தியான பங்கை அடைவதற்குப் பாக்கியவானாய் மாற்றும். இவ்வுலகத்தில் எத்தனை சாதனைகள் புரிந்தாலும், எவ்வளவு செல்வாக்கு ஈட்டினாலும் எவ்வளவு மேலான படிப்புகளைப் படித்தாலும் இவைகள் எல்லாவற்றையும் விட மிக நேர்த்தியான பங்கு பரலோக ராஜ்யமே. இவ்வுலகத்திற்குரிய அத்தனையும் கிடைத்து பரலோகத்தை இழந்தால் பிரயோஜனமில்லை.

> *மத்தேயு 16:26—ன்படி "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?"*

இவ்வுலக வாழ்க்கை கொஞ்ச காலமும் சீக்கிரத்தில் கடந்து போகிறதுமாயிருக்கும். ஒவ்வொரு வருடத்தையும் நாம் கடக்கும் போது மரணத்துக்கு அருகிலோ அல்லது இயேசுவின் வருகைக்கு அருகிலோ நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குப் பங்குள்ளவர்களாய் வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். அவருடைய ராஜ்யத்திற்குப் பங்குள்ளவர்களாய் இருக்க இவ்வுலகத்தில் கீழ்கண்ட நான்கு காரியங்களில் பங்குள்ளவர்களாய் இருப்பது அவசியம். அவைகள்

1. *கிறிஸ்துவினிடத்தில் பங்கு*
2. *கிறிஸ்துவின் பரிசுத்தத்தில் பங்கு*
3. *கிறிஸ்துவின் சுபாவத்தில் பங்கு*
4. *கிறிஸ்துவின் அழைப்பில் பங்கு*



கர்த்தர் இயேசு நமக்கு ஈவாகத் தந்திருக்கிற இந்த 2025—ம் வருடத்தில் இவைகளுக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம். தொடர்ந்து இவ்வருடத்தில் வர இருக்கிற இதழ்களில் இவைகளை ஒவ்வொன்றாய்த் தியானிப்போம். கர்த்தர் நம்முடைய ஜீவியத்தில் ஒரு மாற்றத்தைத் தந்து நமக்கும் நேர்த்தியான இடத்தின் பங்குக்கு சுதந்தரவாளிகளாய் மாற்றுவாராக.

*5 Dimensions of Church Growth*

Churches grow warmer through *fellowship*
Churches grow deeper through *discipleship*
Churches grow stronger through *worship*
Churches grow broader through *ministry*
Churches grow larger through *evangelism*

*Dr. Rick Warren*



# இயேசுவும் காலமும்

## JESUS AND TIME


**Rev.K. ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், மாணவர் ஊழியத்தின் சார்பாக கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

ஒரு புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் அன்பு மாணவ, மாணவிகளே, நம்முடைய வாழ்க்கையில் தேவன் தந்திருக்கிற காலம் மிகவும் ஆசீர்வாதமானது. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் சிறப்பான விளைவுகளை கொடுப்பதில் மிகவும் முக்கியப் பங்குவகிப்பது காலமாகும்.

**ஆகவே,** காலத்தோடு இணைந்து செயல்பட நம்மை அர்ப்பணிப்போம், கற்றுக்கொள்வோம், செயல்படுவோம்.

**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் (பிரசங்கி 3:11).**

**தேவன் அல்பாவும், ஓமெகாவும் ஆனவர். அதாவது ஆதியும், அந்தமும் ஆனவர். இன்னும் சொல்லப்போனால், அவர் ஆரம்பமும், முடிவும் இல்லாதவர்.** ஆனால் அதேநேரத்தில், "இருக்கிறவராகவே இருக்கிறேன்" (I AM THAT I AM) என்று சொல்லி எப்போதும் இருக்கிறவராகவே இருக்கிறார்.

இருந்தபோதிலும். வேதாகமம் முழுவதும் பார்க்கும்போது, தேவனுடைய செயல்கள் அனைத்தும், காலங்களுக்கு உட்பட்டே இருப்பதைப் பார்க்க முடிகிறது. தேவன் எதையும் முந்தியும் செய்வதில்லை, பிந்தியும் செய்வதில்லை. இதற்கு உதாரணமாக, பூமிக்கு வந்த இயேசுவின் வாழ்க்கையை பார்க்கமுடியும்.

### I. இயேசுவும் அவரது பிறப்பும்: JESUS AND HIS BIRTH

- உலகத்தின் இரட்சகராக வந்தாலும், எங்கே, எப்போது, எப்படி பிறப்பார் என்பது தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டது (ஏசாயா 9:6; மீகா 5:2; ஏசாயா 7:14)
- காலம் நிறைவேறினபோது, சரியாக தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட காலம் வந்தபோது, இயேசு பிறந்தார் (கலா. 4:5).
- இயேசுவின் பிறப்பை சாஸ்திரிகளும் சரியாய் கணித்து, தேடி வந்து பணிந்துகொண்டார்கள் (மத். 2:1,2).

### II. இயேசுவும் அவரது இளமைக் காலமும்: JESUS AND HIS CHILDHOOD

- மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, பிறந்து எட்டாம் நாளில் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேற்றப்பட்டது (லூக்கா 2:22).
- இயேசுவுக்கு பன்னிரண்டு (12) வயதானபோது, எருசலேமில் பண்டிகையில் பங்குபெற்றார் (லூக்கா 2:42).
- யூத முறைமையின்படி தனது 12 வயதில் தான் கற்றுக்கொள்ள வேண்டிய பிரமாணங்களையெல்லாம் மிக நேர்த்தியாகவே கற்றுத் தேறினார் (லூக்கா 2:46,47).
- இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தபோதிலும், பிதாவுக்கு அடுத்தவைகளைச் செய்ய வேண்டும் என்கிற காரியம் தெரிந்திருந்தபோதும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார் (லூக்கா 2:51).
- தேவகுமாரனாக இருந்தும், சாதாரண மனிதன் தன் வாழ்வில் எப்படி தன்னை

வளர்த்துக் கொள்வானோ, அதைப்போல, இயேசுவும் தன்னை வளர்த்துக் கொண்டார் (லூக்கா 2:52).

## III. இயேசுவும் அவரது ஊழியமும்: JESUS AND HIS MINISTRY

- இயேசு தன்னுடைய முப்பதாவது வயதில் யோவான்ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். அப்போது, ஆவியானவர் புறாவின் ரூபங்கொண்டு அவர்மேல் வந்தார் (லூக்கா 3:21-23).
- ஏறக்குறைய, இயேசு தன்னுடைய முப்பதாவது வயதில் ஊழியத்தை செய்யத் துவங்கி, தேவவார்த்தையைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார் (மத்தேயு 4:17).
- எந்த ஒரு செயலிலும், சூழ்நிலையின் அடிப்படையில் வேகமோ, அவசரமோ காண்பிக்கவில்லை. சரியான வேளையில் அவைகளைச் செய்தார்.
- யோவான் 2:4-கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை திராட்சரசமாய் மாற்றினபோது என் வேளை இன்னும் வரவில்லை என்றார்.
- யோவான் 11:6,43,44-லாசரு வியாதிப்பட்ட செய்தியைக் கேள்விபட்டபின், பின்னும் இரண்டு நாள் தங்கினார். மரித்து அடக்கம்பண்ணப்பட்டு நான்காவது நாளில் வந்து உயிரோடு எழுப்பினார்.
- யோவான் 17:2-இயேசு தன்னுடைய வாழ்க்கை முடியும் காலத்தை அறிந்து, பிதாவே வேளை வந்தது என்றார்.
- லூக்கா 13:31-33-ஏரோது தன்னை கொலை செய்ய மனதாய் இருக்கிறதைக் கேள்விப்பட்டபோது நான் இன்றைக்கும், நாளைக்கும் பிசாசுகளை துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன் என்று திட்டமாகச் சொன்னார்.

## IV. இயேசுவும் அவரது மரணமும் உயிர்த்தெழுதலும் : JESUS AND HIS DEATH & RESURRECTION

- மத்.26:45-இயேசு கெத்செமனேயில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, தான் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப்போவதை அறிந்து, “வேளை வந்தது” என்றார்.
- லூக்கா 9:22; ரோமர் 5:6-இயேசு தாம் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்க வேண்டும் என்று சென்னார்.

இப்படி இயேசுவின் பிறப்பு முதல் அவருடைய உயிர்த்தெழுதல் வரை அதினதின் காலத்தில் எல்லாம் நேர்த்தியாக நடைபெற்றது.

இயேசு பிதாவின் சித்தப்படி, அவருக்குச் சித்தமான காலத்தில், இந்த உலகத்திற்கு வந்து, சிலுவையில் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றினார். நீங்களும் இந்த உலகத்தில் முந்தியும் இல்லை, பிந்தியும் இல்லை.

தேவன் உங்களையும் சரியான காலத்தில் தான் (CHRONOS) இந்த உலகில் வைத்திருக்கிறார். அதற்கு ஒரு நோக்கம் உண்டு. ஆகவே, இப்போது நீங்கள் என்ன செய்யவேண்டுமோ (KAIROS) அதைச் செய்யுங்கள். காரணம் இந்தக் காலம்...

- நீங்கள் நன்றாய் படிக்கவேண்டிய காலம்.
- காலத்தை வீணாக்காமல், உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் காலம்.
- உங்களைக் குறித்த தேவசித்தத்தை அறிந்துகொள்ளும் காலம்.
- தேவன் உங்களைக் கொண்டு செய்ய நினைத்திருக்கிற காரியத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்தும் காலம்.

தேவன் உங்களைக் கொண்டு இந்த உலகத்தில் செய்ய நினைத்த காரியங்களைச் செய்து முடிக்க உங்களை ஆசீர்வதித்து, பெலப்படுத்துவாராக. ஆமென்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! கடந்து ஆண்டு முழுவதும் பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். இந்த புதிய ஆண்டில் தேவன் உங்களுக்கு சிறப்பான பாதுகாப்பையும், ஆரோக்கியத்தையும், தெய்வீக ஞானத்தையும் அருளி உங்களை வாழ்ந்திருக்கச் செய்வாராக. கடந்த ஆண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்த இயேசப்பாவுக்கு நன்றி சொன்னீங்களா? வெரிகுட். இந்த புதிய ஆண்டில் புதிய கதையுடன் உங்களை சந்திக்க வந்திருக்கிறேன். வாங்க கதை கேட்கலாம்.

ஒரு சிலந்தி பூச்சி நெற்பயிரின் வயலில் தன் கூட்டை கட்டி வாழ்ந்து வந்தது. அந்த கூட்டில் சிக்கும் சிறு பூச்சிகளை தன் இரையாக உண்டு தன் காலத்தை சந்தோஷமாக கழித்து வந்தது. ஒரு நாள் ஒரு சிறு பூச்சி அதில் மாட்டி கொண்டது. சிலந்தி அதை இரையாக்க முயன்றபோது, அந்த பூச்சி சிலந்தியிடம், நீ என்னை சாப்பிடாமல் விட்டுவிட்டால், நீ உன் உயிரை காப்பாற்றி கொள்ளும்படியான ஒரு முக்கிய செய்தியை உனக்கு சொல்லுவேன்' என்றது. சிலந்தி ஒரு சிரிப்பு சிரித்து விட்டு, 'என்ன செய்தி' என்று கேட்டது. அதற்கு அந்த பூச்சி, 'நீ இந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு போய்விடு. அறுவடை காலம் வருகிறது' என்றது.

அப்போது, சிலந்தி 'நீ என்னிடம் கதை விடுகிறாய், அறுவடை அது இது என்று, என்னிடமிருந்து தப்பித்துக்கொள்ள நீ சும்மா ஏதோ கதை விடுகிறாய்' என்றது. அதற்கு அந்த சிறுப்பூச்சி, 'இல்லை, இது உண்மை, நான் சொல்வதை கேள், இந்த வயலின் எஜமானர் அறுவடை செய்ய சீக்கிரம் வரப்போகிறார். ஆகவே இந்த இடத்திலிருந்து நீ வேகமாய் சென்று விடு. முதிர்ந்து நிற்கும் அந்த கதிர்களை பார், எஜமானர் ஒரு பெரிய மெஷினை கொண்டு வந்து, கதிர்களை கொய்வார். அப்போது நீ கொல்லப்படுவாய், ஆகவே நீ போய்விடு' என்று கூறியது.

சிலந்தியோ, எனக்கு அறுவடை மீதோ, ஒரு பெரிய இயந்திரம் வந்து அவைகளை கொய்து எடுக்கும் என்றோ நம்பிக்கை இல்லை, நான் இங்கு வந்தது முதல் எல்லாம் அப்படியே தான் இருக்கிறது, ஒரு மாற்றமும் இல்லை, நான் சந்தோஷமாக காலத்தை கழித்து வருகிறேன். உனக்கு அது பொறுக்கவில்லை, நீ சொல்வதை நான் கேட்க விரும்பவில்லை, சும்மா கதை பேசி கொண்டிருக்காதே' என்று சொல்லி இந்த சிறுப்பூச்சியை இரையாக விழுங்கி விட்டது.

அடுத்த நாள், மழையோ காற்றோ இல்லாமல் சூரியன் உதித்து, எல்லாம் நன்றாக இருந்தது. சிலந்தி வலையில் சிக்கிய ஒரு பூச்சியை உண்டுவிட்டு, குட்டி தூக்கம் போட ஆரம்பித்தபோது, ஏதோ ஒரு இயந்திரம் அருகில் வரும் சத்தம் கேட்டது. ஒரு நிமிடத்தில் அதன் கூடும் சிலந்தியும் அழிந்து போனது.

அன்பு தம்பி தங்கச்சி, புதிய ஆண்டின் முதல் மாதத்தில் எங்கு பார்த்தாலும் புது புது வாக்குத்தத்தங்கள், தீர்க்கதரிசனங்கள், ஆசீர்வாதங்கள் என வாரி வழங்கப்படுகிறது. அனைத்தும் நல்லது தான். அதேநேரம் தேவன் நம்மை தெரிந்தெடுத்ததின் உன்னத நோக்கமே அவருடைய வருகையில் நாம் அவரை சந்திப்பதற்காக தான். அப்படியானால் நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இயேசப்பாவினுடைய வருகையின் நாட்கள் மிகவும் சமீபித்து விட்டது. ஆனால் உலக மக்களோ எதுவுமே நடக்க போவதில்லை என்பதை போல் தங்கள் இஷ்டப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய சிறுவயதிலிருந்து இயேசுகிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார் என்று கேட்டு கொண்டிருக்கிறேன், இதுவரை வரவில்லை, என்னுடைய பிள்ளைகளும் இதோ கிறிஸ்து வரப்போகிறார் என்பதை கேட்டு கொண்டிருக்கிறார்கள், ஒருவேளை எல்லாமே கட்டுக்கதையோ' என்று நினைப்பவர்களும் உண்டு. தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். அதை உணராமல், கிறிஸ்து எங்கே வரப்போகிறார் என்று நிர்விசாரமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஏராளம் ஏராளம்.

அன்பு தம்பி தங்காய், வருகையை குறித்து நாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பேருந்து நிலையத்தில் நாம் விரும்பிய ஊருக்கு செல்லும் பேருந்துக்காக வெகுநேரம் காத்துக்கொண்டிருக்கும்போது திடீரென பேருந்து வந்தால் நம் உள்ளம் எப்படி மகிழ்ச்சியினால் துள்ளும். அதுபோன்று தான் கர்த்தருடைய வருகையும். பாவம் செய்கிறவர்களுக்கு தான் அது புலம்பலின் நாள். தேவனுக்கு பயந்து பாவத்திற்கு விலகி ஓடும் நமக்கோ அது கொண்டாட்டத்தின் நாள். ஆகவே வருகையை குறித்த எதிர்பார்ப்புடனும், எச்சரிக்கையுடனும் இந்த புதிய ஆண்டில் ஒவ்வொரு நாளும் அடியெடுத்து வைப்போம். பாவத்திற்கும், பாவத்தை தூண்டும் சூழ்நிலைகளுக்கும் விலகியிருப்போம். தேவன் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வாதமாக ஆச்சரியமாக ஆலோசனை தந்து நடத்துவாராக.

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 3:20).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---

2025 **ஜனவரி 14, 15**
(செவ்வாய், புதன்)
**மத்திய வாலிபர் முகாம்**
கேம்ப் சைட், மதுரை

2025 **ஜனவரி 25**
(சனிக்கிழமை)
**மண்டல உபவாச நாள்**
அந்தந்த மண்டலங்களில்



# உன் குமாரர் தீவிரித்து வருவார்கள்

Rev. பெகின் சாமுவேல்

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்களை தமிழ்பிரதேச சிறுவர் ஊழியங்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இதழ்வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இதழிலும் தேவன் நமது தமிழ்பிரதேச சிறுவர் ஊழியங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மிகவும் சந்தோஷம் அடைகிறேன். உன் குமாரர் தீவிரித்து வருவார்கள் (ஏசாயா 49:17). இந்த வருடத்திலும் நம் பிள்ளைகள் இயேசுவினிடத்தில் இரட்சிக்கப்பட்டு வரப்போகிறார்கள்.

கர்த்தர் என்னென்ன காரியங்களை சிறுவர் ஊழியத்தில் செய்ய போகிறார் என்பதை பார்ப்போம்.

**1. எதிர்ப்புகளை மாற்றுவார்**

உன்னை நிர்மூலமாக்கினவர்களும் உன்னைப் பாழாக்கினவர்களும் உன்னைவிட்டு புறப்பட்டுப்போவார்கள் (ஏசாயா 49:17) என்று அதே வசனத்தில் வாசிக்கிறோம்.

மோசே மூன்று மாத சிறு குழந்தையாக நைல் நதியில் போடப்பட்டான். அவனை அழிக்க நினைத்த பார்வோனுக்கு முன்னால் அவன் அமிழ்ந்து போகவில்லை. ஆனால் அவனுடைய ராஜ அரண்மனைக்குள்ளே வளர்க்கப்பட்டான். அதுமட்டுமல்லாமல், அழிக்க நினைத்த சக்தியை அதம்பண்ணும்படியாக விடுவிக்கபட முடியாத எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவ ஜனங்களை விடுவித்து, ஒரு இரட்சகனாக கடக்க முடியாதிருந்த சிவந்த சமுத்திரத்தை கடக்கப்பண்ணி வழிநடத்திச் சென்றவன்தான் இந்த மோசே. அதே தேவன்தான் இன்றைய நாட்களில் சிறுவர்களுக்கும், சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களுக்கும் எதிராயிருக்கிற எல்லா காரியங்களையும் மாற்றுவார்.

**2. இரட்சிப்பைத் தருவார்**

என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள். பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும். உன்னோடு வழக்காடுகிறவர்களோடு நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன் (ஏசாயா 49:25).

இயேசுவே வேண்டாம் என்று கூறிக்கொண்டு வாழ்பவர்கள் இயேசுவை நாடி தேடும் நாட்கள் வரப்போகிறது. உலகம் முழுவதும் சமாதான குறைச்சல்கள், தனிமையுணர்வு, நிந்தைகள், போராட்டங்கள் இருந்தாலும் இயேசுவை ஏற்றுக்கொண்ட உங்கள் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாய் இருக்கும். உங்கள் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும் (ஏசாயா 54:13,14).

பெற்றோர்களே, எதை நம் பிள்ளைகளுக்கு கொடுக்கப்போகிறோம்? உலகப்பிரகாரமான சொத்தையா? அல்லது விலையேறப்பெற்ற இரட்சிப்பையா?

உலக ஆஸ்திகள் ஒரு நாள் அழிந்துபோகும். ஆனால் நாம் கொடுக்கும் நல்ல பங்காகிய கிறிஸ்துவின் இரட்சிப்பு, கிறிஸ்துவுக்குள்ளான எல்லா ஐசுவரியத்தையும் நம் பிள்ளைகளுக்கு கொடுக்கும்.

**3. எழுப்புதலைத் தருவார்**

பிள்ளைகளற்றிருந்த உனக்கு உண்டாயிருக்கப்போகிற பிள்ளைகள் இடம் எங்களுக்கு நெருக்கமாயிருக்கிறது. நாங்கள் குடியிருக்கும்படிக்கு விலகியிரு என்று உன் காதுகள் கேட்கச் சொல்லுவார்கள் (ஏசாயா 49:20).

எழுப்புதல், எழுப்புதல் என்று எங்கும் தொனிக்கிற இந்நாட்களில், நம் பிள்ளைகள் மத்தியில் தேவன் இவ்வாண்டில் எழுப்புதலைத் தருவார். யோவான்ஸ்நானனின் தாய் எலிசபெத் ஒரு ஆசாரியனின் மனைவி அவள் தன் மகனின் மூலம் எழுப்புதலை பரவச் செய்தாள். ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் அவனைப் போல சிறந்தவன் இல்லை என்று இயேசு புகழும் அளவுக்கு மாதிரியான மனிதனாக இருந்தான். கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ணுகிறவனாக, எரிந்து பிரகாசிக்கும் விளக்காக, அநேக ஜனங்களை இரட்சிப்பண்டை நடத்துகிறவனாக அவன் இருந்தான். இதை வாசிக்கிறவர்களே, நம் பிள்ளைகளை நாம் எப்படி வளர்க்கிறோம்? எழுப்புதலின் தீ நம் பிள்ளைகள் மூலம் தேசம் முழுவதும் பற்றி எரிய வேண்டும் என்ற வாஞ்சை உள்ளதா?

நாங்கள் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்பானவர்களே, இந்த வருடத்திற்கான விடுமுறை நாட்களில் நடைபெற இருக்கும் AGVBS ஆயத்த வேலைகள் ஆரம்பமாகி, நடந்து கொண்டிருக்கிறது. தேவ வழிநடத்துதலின்படி 2025 AGVBSக்கான தலைப்பு **POWER TEAM** என்று தெரிந்தெடுக்கப்பட்டு, அதற்கான பாடத்திட்டங்கள், பாடல்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. விரைவில் உங்களை சந்திக்க இருக்கிறோம். இந்த ஊழியங்களுக்காக நீங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

---

## போட்டி எண் : 8 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: E.கலா; ரேஷ்மா; கோகிலா; ராதாமணி; பியூலா; கிரிஜா; குளோரி; சித்ரா பிளஸ்சி; எஸ்தர்; சாந்தி; கனகவல்லி; ஜீவா; மஞ்சு; பிரபா; மரகதம்; ஜெயசிலின்; பூங்கோதை; கலைவாணி; K.சாராள்; S.முத்துலெட்சுமி; J.சுமதி; மயில்; கிறிஸ்டி; மாது; புஷ்பவல்லி; முத்துகோபால்; ராணி பிளஸிங்; விஜி; டோரா; அன்னாள்; T.கலா; மெர்ஸிராஜம்;|**ஆறுமுகநேரி**: சுகிர்தா டைட்டஸ்; சரோஜா; இமான்ஷி பிரியா; I.பாக்கியா; G.ஜோதி மீனா; P.அனன்சி அருண்; S.நிவேதா; M.கிருபா; M.ஏஞ்சல்; இருதய ஸ்டெர்லின்; செல்வபிரியா; வெண்ணிலா எஸ்தர்; |**ஸ்ரீவில்லிபுத்தூர்**: T.மெசி; பாஞ்சாலி; S.மார்ட்டின்; K.நித்யா; R.காபிரியேல்; அழகு நாச்சியார்; கிருபா; G.மாதவி; நெல்சன் செல்வராஜ்; வசந்தா; எஸ்தர் இந்திரா;|**கடையநல்லூர்**: செல்வி கண்ணன்; G.ஸ்டெல்லா; L.பெல்சியா; A.அபிஷா யூஜின்; M.செல்வி; ரமணி; M.வினோலியா; செல்வி இந்திராணி; தங்கராஜ்; |**உடுமலைப்பேட்டை**: P.சந்தனா மதன்; A.F.எட்வர்ட்; P.சுகந்தி; சூசன்னாள்; புஷ்பா மேரி; ஆனந்த குமாரி; C.முத்துலெட்சுமி; ஜெயந்தி மூர்த்தி;|**திருநின்றவூர்**:J.வின்சி; M.மாலதி; J.அனுலா; S.அனிதா; K.மார்த்தாள்; கேத்ரின்; லீலா பரணி;|**திருச்சி**:மரியா; வசந்தி முத்து;சாந்தி ஆனந்தன்; ஆர்த்தி சுஜிதா; பிரிஜிட் சகாயராஜ்; கிறிஸ்டி மகாலெட்சுமி; K.சாந்தி; ஷெர்லி; ஜஸ்டஸ் டேனியல்;|**இறச்சகுளம்**: ரேணு ரூபன்; கனகமணி; P.ஜெஸ்மின்; ஷாலினி; |**தேனி**: செண்பகபுஷ்பா ஜேம்ஸ்; கார்த்தியேயாயினி; J.கிருபா; திரவியச்செல்வி;| **KTC நகர்**: பிரேமா ரூத்; சில்வியா; P.சிவகாமி; ஆஷா குத்சியா பேகம்;|**சேத்துப்பட்டு**: ரெக்ஸி ஈஸ்வரன்; மரகதம்; சுகந்தி பெனடிக்; செல்வி பெர்சியாள்; ஜெபா விஜய்; ஷாலினி; | **ஆலங்குளம் (வி)**:

## போட்டி எண் : 8 (சரியான விடை எழுதியவர்கள்) ...

R.V.பிளாரன்ஸ்; ஸ்டீபன்; மரியாள்; ஸ்டெல்லா மேரி; K.ஸ்டெல்லா; ரெஜினா சாரு;|**கூத்தாநல்லூர்**: S.A.M.பாஸ்டியன்; கிளமாண்டின்; ஷெர்லி; **மதுராந்தகம்**: சரண்யா; ஷகிலா; பவித்ரா; கிரேஸ் பியூலா;|**மடத்துக்குளம்**: ரூத்; பரிமளா; K.சரண்யா; சேர்மக்கனி; ஜெனிட்டா ஜுலியட் மேரி;|**கோயம்புத்தூர்**: நித்யா பெர்க்மன்ஸ்; கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டென்சில்; ரோஸ்லின் சாந்தி; குளோரிபால்;|**நாகலாபுரம்**: S.ஷாலோம் இன்பென்ட் சுஜந்த்; N.சாராள்; G.லில்லி ஜெனட் தங்கம்; V.ஷைனி; |**நெல்வாய்** : P.தேன்மொழி; D.அருணா; கிரசன்ட் ராய்; மலர்விழி;|**சென்னை**: M.சாரு; மெர்லின் ஹெலன் பிரதியா; ஆஷா; மேரிகுட்டி;|**புளியங்குடி**: ஜெபஞானம். ஜெயமணி; சுந்தரி;|**தூத்துக்குடி**: M.சித்ரா; கலைசெல்வி; பிரான்சிஸ்; ஜெப்ரினா; சில்வெஸ்டர்; |**இராமன்புதூர்**: லீதியாள்; ஜான்சி ராணி; அன்னம்மாள்; அபிகாயில்;|**பெருங்குளம்**:அருள்குமார் ராமன்; A.பியூலா ஜோபாய்; M.கௌசல்யா; R.ஜெபா;|**அச்சிறுபாக்கம்**: T.சௌந்தர்யா; T.விஷ்ணுபிரியா; A.செல்வகுமாரி; நான்சி;|**ஆண்டிப்பட்டி**: தபீத்தாள் ராணி; புளோரியா; தேவபாக்கியம்;|**கோவில்பட்டி**: மரியாள் ஜெயசிலி; S.ரேச்சல்; |**மதுரை**: ஹில்டா வேதநாயகம்; மேரிராஜ்; கமலி; கனகவல்லி;|**ஆம்பூர்**: சுகன்யா விண்ணி; ரூபி மனோ; கிரிஜா சத்யா; |**நாகமலை**: M.ஆனந்தி; விஜிலா;|**ஏழாயிரம் பண்ணை**: ஜாய் ராஜா; பனிமய ஜோதி; |**இளையரசனேந்தல்**: பெப்சி ராணி; |**திண்டுக்கல்**: லதா ஜான்சன்;|**சேலம்**: T.இந்திரா; பெட்ரிஷியா டேவிட்; | **மேல அனுப்பானடி**: V.ஜெயா; R.அனிதா; |**கிருஷ்ணகிரி**: அன்பு ஜெயா; அனிதா ஷைலா;|**T.N.பாளையம்** : சுஜா ஜான்; ஜெப்ரின் இம்மானுவேல்; **சாத்தூர்**: சரோஜா;|**பழனி**; K.சாந்தி; பிரிசில்லா; |**பரமத்தி வேலூர்**: பாமா; திருச்செல்வி; |**குற்றாலம்**: R.வேளாங்கனி;| **கல்லல்**: அபிஷாக்; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்;|**வத்ராப்**: ஜெபராணி;|**K.P.வலசை**: சீலி; |**சுரண்டை**: குளோரி ஞானம்;|**ஸ்ரீவைகுண்டம்**: M.சங்கீதா;|**சீராநாயக்கன்பாளையம்**: ரத்தினம்; |**வடசேரி**: T.கிறிஸ்டி;|**திருநெல்வேலி**: ரெஜினா;|**செண்பகராமன்புதூர்**: வனிதா;|**குமாரபுரம்**: அன்னாள்; |**பாளையங்கோட்டை**: சாந்தகுமாரி; |**கட்டபெட்டு**: புஸ்பமாலா; |**காசிமேஜர்புரம்**: ரூத் செல்வராஜ்; |**ஆத்தூர்**: பிளாரன்ஸ்; |**கள்ளக்குறிச்சி**: தங்கம் சாக்கோ; |**இலுப்பையூரணி**: V.வால்டர்சிங்;|**இடைகால்**: செல்வி ஜான்சன்; |**கம்பம்**: ஜோதிமணி; |**கீழசெவல்பட்டி**: R.ஜெயகலா;|**நீலகிரி**: சார்லஸ்;|**முக்கூடல்**: T.முத்து கிருஷ்ணன்; |**வெள்ளகால்**: S.கலா சுரேஷ்;|**வளசரவாக்கம்**:சிவகாமி தனராஜ்; |**பாவூர்சத்திரம்**: S.ஜெசிலி;|**தஞ்சாவூர்**: தேவகுமார்;|**ஆவடி**: எழிலரசி; **அகஸ்தியர்பட்டி**: S.நிர்மலா; |**குரும்பூர்**: வசந்த வினோதினி;| **கொத்திமங்கலம்**: உமா தேவ ஜோதி; |**சேர்ந்தமங்கலம்:**பாத்திமா அக்பின்;|**பெருந்துறை**: L.புரோனிக்கா;|**தேவகோட்டை**: மனோஜினி ரஜின்; |**வீராணம்** : எப்சிபா; |**நாசரேத்**: G.எஸ்தர்; மெர்சி;|**திரேஸ்புரம்**: J.புருசிமா;|**சிட்லபாக்கம்**:T.ரெபெக்காள்;|**குரோம்பேட்டை**: கோமதிகுமார்;|**அரும்பாக்கம்**:A.மேரி; சற்குணம்;| **மேட்டூர்**: பத்மினி ஸ்டீபன்; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**வேப்பம்பட்டு**: J.ஜோஸ்மேரி பாளையம்; M.ஆர்த்தி; |**சிங்காநல்லூர்**: எப்ரோன்ஷா;|**பள்ளிக்கரணை**: புவனேஸ்வரி; |**திசையன்விளை**: செல்வபாக்கியம்; | **திருச்செந்தூர்**: தேவதாஸ்; |**மூக்குப்பீறி**: T.செல்லத்தாய் ராணி; |**மேடவாக்கம்**: பியூலா ஜாய்ஸ் சுகந்தி; | **வடக்குகோணம்**: மரியநேசம்; |**கடாட்சபுரம்**: ரேவதி கில்பர்ட்; |**தெற்கு உடையார் பாளையம்**: பிளாரன்ஸ்; |**கோடம்பாக்கம்**: சுந்தரிபாய்; |**களக்காடு**: ஜெயமெர்சி; விமலாமேரி; |**செம்பாக்கம்**:மரகதலீலா;|**கடலையூர்**: ஆபிரகாம்; |**அச்சரபாக்கம்**: சாலினிபாண்டியன்; |**அய்யம்பாக்கம்**: அம்மணி; |**மூலைக்கரைபட்டி**: தமிழ்செல்வி; **பெரமனூர்**: ஜான்சிராணி; |**கல்லுக்குழி**: டால்டன்; |**பழையகாயல்**: எலிசபெத்: |**சொக்கன்குடியிருப்பு**: ஜான்சி ராணி; |**கொங்கத்தான்பாறை**: சந்திரா ஆல்பர்ட்;| **நத்தக்காடையூர்**: ஏசையன்; |**ராமலிங்காபுரம்**: அருணாதேவி; |**பெரியபாளையம்**: கவிதா; |**வன்னியன்சத்திரம்**: சந்திரா சாலொமோன்ராஜ்; |**நாகபட்டினம்**: வின்சென்ட்ராஜ்; **தாமரைக்குளம்**: ஜேம்ஸ்மேரி; **மேப்பேடு**: ஜான்சிராணி

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-9
## (நியாயாதிபதிகள், ரூத்) இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. லபிதோத்தின் மனைவி பெயர் என்ன?
2. பலத்த பராக்கிரமசாலியாய் இருந்தவன் யார்?
3. யார் சபிக்கப்பட்டவன்?
4. யாருடைய கைகால்களின் பெருவிரல்கள் தறித்துப்போடப்பட்டது?
5. யாருடைய நாட்களில் தேசமானது 40 வருஷம் அமைதலாயிருந்தது?
6. இடதுகை வாக்கானவர்கள் எத்தனை பேர்?
7. இஸ்ரவேலை 20 வருஷம் நியாயம் விசாரித்தவன் யார்?
8. கிதியோனுடைய வேலைக்காரனின் பெயர் என்ன?
9. தாண் வம்சத்தானும் சோரா ஊரானுமான இவன் யார்?
10. யாகேலுடைய கணவன் பெயர் என்ன?
11. இடது கை பழக்கமுள்ளவனாகிய இவன் யார்?
12. கிதியோன் கட்டிய பலிபீடத்தின் பெயர் என்ன?
13. எந்த பட்டணத்தின் நடுவே பலத்த துருகம் இருந்தது?
14. சோரேக் ஆற்றங்கரையில் இருந்த ஸ்திரீயின் பெயர் என்ன?
15. இருபத்திரண்டு வருஷம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தவன் யார்?
16. எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய இவன் யார்?
17. பொன்கடுக்கன்கள் யாரிடம் இருந்தது?
18. மரணத்துக்கு துணிந்து நின்றவர்கள் யார்?
19. பத்து வருஷம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தவன் யார்?
20. எதினால் ராமாத் லேகி என்று பெயரிடப்பட்டது?
21. எங்கே பயமில்லாமல் அமரிக்கையும், சுகமாயிருந்தார்கள்?
22. தன் மாமி கற்பித்தபடியெல்லாம் செய்தவள் யார்?
23. எலிமெலேக்கின் இரண்டு குமாரரின் பெயர் என்ன?
24. ஓபேத் யாரைப் பெற்றான்?
25. மிகுந்த ஆஸ்திக்காரனாகிய இவன் யார்?

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.02.2025



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## திருச்சியில் நடைபெற்ற Global University பட்டமளிப்பு விழா – 10.11.2024








## AGNM மண்டல ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி முகாம் –13,14–11.2024






Registered News Paper Regd. No. 8206 / 62

# வாசகர்கள் அனைவருக்கும்
# இனிய புத்தாண்டு
## நல்வாழ்த்துக்கள்

HAPPY NEW YEAR

2025

ASSEMBLIES OF GOD

AG

# ASSEMBLIES OF GOD
## தமிழ் பிரதேசம்
## எழுப்புதலின் 10 ஆண்டுகள்
### ஜெபக்குறிப்புகள்

ஒரு ஆண்டிற்குரிய இலக்குகளுக்காக ஜெபியுங்கள் 2025

- 35,000 ஜெப பங்காளர்கள்
- 35,000 புதிய அங்கத்தினர்கள்
- 350 புதிய ஊழியர்கள்
- 60 மிஷனரிகள்
- 300 புதிய சபைகள்
- 350 கிராம வீட்டு சபைகள்
- 350 மூப்பர் பயிற்சி

# DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664